524

524

NAMATHU ATCHI MURAI

(TAMIL)

BOOK I

FOR CLASS IV

18 DEC 1945

BY

MRS. D. LAKSHMIKANTAM AMMAL, B.Sc., L.T.

Head Mistress,

Rao Bahadur C. C. C's. Hindu Girls' School,

Chintadripet, Madras.

163

THE TEACHERS' PUBLISHING HOUSE

EDUCATIONAL PUBLISHERS : : MADRAS

நமது ஆட்சி முறை

நான்காம் வகுப்பு

172·1

18 DEC 1945

159
163

எழுதியோர் :

Mrs. D. லக்ஷ்மிகாந்தம் அம்மாள், B. Sc., L. T.,

தலைமை ஆசிரியர்

ராவ்பகதூர், கலவல கண்ணன் செட்டி இந்து பெண் பாடசாலை

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

53-56, பவழக்காரத் தெரு : : சென்னை

1945

[விலை அணா 7

பதிப்புரிமை]

First Issued Nov. 1945

W:3

Printed at the Progressive Printers, G. T. Madras.
Q. H. MS. 58—30-11-'45

பொருள் அடக்கம்

பாடம்		பக்கம்
1.	நமது கடமை	1
2.	சுத்தமான வாழ்க்கை	8
3.	காற்றும் நீரும்	13
4.	உணவு	17
5.	உடலும் ஓய்வும்	21
6.	தொத்து நோய்கள்	24
7.	சுகாதார விதிகள்	29
8.	கிராமமும் கிராம ஆட்சியும்	32
9.	கிராம சபைகள்	34
10.	கூட்டுறவுச் சங்கம்	38
11.	முனிசிபாலிடி	40
12.	சென்னை நகர சபை	43
13.	ஜில்லாக்களும் ஜில்லா சபைகளும்	46
14.	சென்னை மாகாணம்	50
15.	சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம்	52
16.	தபால் கடிதம்	57
17.	புகை வண்டிப் பிரயாணம்	61
18.	பாடசாலைத் தோட்டம்	65
19.	சாலை விதிகளும் தற்காப்பு முறையும்	68

8 DEC 1949

முன்னுரை

'இன்றைய சிறுவர்கள் நாளைக்குப் பெரியவர்களாவார்கள்' என்பது உண்மை. ஆகவே நாட்டின் ஆட்சி, உடலின் ஆட்சி ஆகிய இவைகளை அவர்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த விஷயங்களைப் பாடசாலைகளில் போதிக்கிறார்கள். இந்த விஷயங்களைப் போதிக்கக்கூடிய புத்தகங்களை 'சிவிக்ஸ்' என்று கூறுகின்றோம். சிறுவர்கள் இவ்விஷயத்தை எளிதில் அறிந்து கொள்ள **நமது ஆட்சி முறை** என்னும் பெயருள்ள இந்தப் புத்தகங்கள் எளிய நடையில் எழுதப்பெற்று, சித்திரப் படங்களுடன் வெளிவருகின்றன.

இந்த இரு புத்தகங்களும் அரசாங்கத்தார் 1943-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ள புதிய பாட திட்டப்படி எழுதப் பட்டிருக்கின்றன. சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம் (Junior Red Cross), காய்கறித் தோட்டம் ஆகியவற்றைப்பற்றித் தெளிவாக எழுதியிருக்கின்றேன்.

சிறுவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்த விஷயங்களை எடுத்துக்காட்டி, அதன் மூலம் புது விஷயங்களைப் போதிக்கும் முறையைக் கையாண்டுள்ளேன். கிராம ஆட்சி முதல், இந்தியா ஆட்சி முடிய உள்ள முக்கிய விஷயங்களையெல்லாம் சிறுவர்கள் இப்புத்தகங்களின் வாயிலாகச் சுலபமாகத் தெரிந்து கொள்ளுதல் கூடும்.

இந்தப் புத்தகங்கள் நான்கு, ஐந்தாம் வகுப்புகளுக்காக எழுதப்பெற்று வெளிவருகின்றன. நான்காம் வகுப்புப் புத்தகத்தில் சில பாடங்களுக்குப் பயிற்சிகளும் கொடுத்திருக்கின்றேன். ஐந்தாம் வகுப்புப் புத்தகத்தில் பாடங்களைச் சுருக்கமாக விளக்கும் பாடக் கண்ணாடிகள் சிலவும் எழுதியுள்ளேன். இந்த நூல்களை உபாத்தியாயர்களும், கல்விமான்களும் ஏற்றுக்கொண்டு ஆதரிப்பின், அதுவே என்னை இத்துறையில் மேன்மேலும் ஊக்கும் கருவியாகும். இந்த நூல்களை அச்சிட்டு வெளியிடுவதில் உதவிபுரிந்த சென்னை, வெஸ்லி ஹைஸ்கூல் தமிழாசிரியர் **வித்துவான் எஸ். வி. வரதராஜ ஐயங்கார்** அவர்களுக்கு எனது நன்றி உரியதாகும்.

இங்ஙனம்,

Mrs. D. லக்ஷ்மிகாந்தம் அம்மாள்.

நமது ஆட்சி முறை

1. நமது கடமை

சிறுவர்களே! நாம் பலருடன் கூடி வாழ்கின்றோம். நல்லது இது, கெட்டது இது என்று நமக்குத் தெரிகிறது. நாம் பிறருக்கு உதவி செய்கின்றோம். நமக்கு மேலான அறிவு உண்டு. இந்த அறிவுக்குத்தான் பகுத்தறிவு என்று பெயர். இவ்விதமான அறிவு மற்றப் பிராணிகளுக்கு இல்லை. நம்மைச் சுற்றிலும் பாருங்கள். மரங்கள், செடிகள், கொடிகள், மலைகள், ஆறுகள், பறவைகள், மிருகங்கள், குளங்கள், குட்டைகள், ஓடைகள், ஏரிகள், வீடுகள், குடிசைகள் ஆகியவை இருக்கின்றன.

இவைகள் நமக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்கின்றன. ஒவ்வொன்றும் நமக்கு ஒரு விதமான உதவியைச் செய்கிறது. நாமும் இவைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகள் உண்டு. நம் கடமைகளைச் செய்து, அவைகளிடமிருந்து நாமும் நல்ல உதவியைப் பெறுகின்றோம். நம்மைச் சுற்றியுள்ளவைகள் சுகமாக இருந்தால்தான் நாமும் சுகமாக இருக்க முடியும்.

நாம் வீட்டில் பிறக்கின்றோம்; மிருகங்கள் காட்டில் பிறக்கின்றன. சில பிராணிகள் நாட்டில் பிறக்கின்றன. நாம் பாடசாலைக்குப் போய், பல பிள்ளைகளுடன் பழகுகின்றோம். நம்மோடு பழகாத மிருகங்களும், பறவைகளும் நமக்குத் தெரிந்தும், தெரியாமலும் நன்மைகள் செய்கின்றன. நாம் பழகும் இடங்கள், மக்கள் ஆகியோருக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள் பல இருக்கின்றன.

நாம் வீட்டில் வாழ்கின்றோம். நம்முடன் தாய், தந்தை முதலியோரும் வசிக்கிறார்கள். இவ்வாறு உற்றாரோடு சேர்ந்து வசிப்பதுதான் குடும்ப வாழ்க்கை. குடும்பத்துக்குத் தலைவர் தந்தை. அவருடன் தாய், அண்ணன், தமக்கை, தம்பி, தங்கை முதலியோர் வாழ்கிறார்கள். குடும்பத்தில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள். அதனால் குடும்பம் கஷ்டமில்லாமல் நடைபெறுகிறது. தந்தை குடும்பத்துக்கு வேண்டிய பொருளைச் சம்பாதிக்கிறார். தாய் அவற்றைக்கொண்டு உணவு சமைத்து, நமக்கு இட்டு, குடும்பத்தை நடத்துகிறாள். நாமும் நமது கடமைகளைச் செய்யவேண்டு மல்லவா?

பெற்றோர்கள் அவர்களுடைய கடமைகளைச் செய்கிறார்கள். நமக்கு நோய் நொடிகள் வராமல் காத்து, நாம் பெரியோராக வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். நாமும் அவர்களுக்குச் சிறு சிறு உதவிகளைச் செய்கின்றோம். அவர்களிடம் பணிவோடு நடந்துகொள்ளுகின்றோம். நன்றாகக் கல்வி கற்று அவர்களுக்குச் சந்தோஷத்தை உண்

டாக்குகின்றோம். நமக்கு வயது வந்ததும், சம்பாதித்து நம்மை வளர்த்தபெற்றோர்களைக் காப்பாற்றிப் பணிவிடை செய்கின்றோம். இது மேலான காரியம் அல்லவா ?

இவ்விதமாகக் குடும்பத்தில் உள்ள அனைவரும் தங்களுடைய கடமைகளைச் செய்து வந்தால் அந்தக் குடும்பத்துக்கு என்ன குறை? நான் ஒரு குடும்பத்துக்குப் போயிருந்தேன். இரவு மணி 9-30 இருக்கும். அந்தக் குடும்பத்தின் தலைவர் எனது சிநேகிதர். நான் போனபோது குடும்பத்தார் அனைவரும் வட்டமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

குடும்பக் கடமை

வட்டத்தின் நடுவில் ஒரு விளக்கு தொங்கிக்கொண்டிருந்தது. ஒருவர் கடவுள் வாழ்த்துப் பாடினார். வீட்டுத் தலைவர் கடவுளுக்கு நன்றி கூறினார்.

"கடவுளே நாங்கள் இன்று மாலை வரையில் எங்கள் கடமைகளைச் செய்து முடிக்கச் சக்தி கொடுத்தீர். இரவு ஓய்வு கொள்ளுகின்றோம். நல்ல தூக்கமும், மறுநாள் எங்கள் கடமைகளைச் செய்யச் சக்தியும் கொடுத்தருள வேண்டும்" என்று அவர் சொல்லி முடித்தார். அனைவரும் அமைதியாக இருந்தனர்; பிறகு எழுந்தனர். நானும் என் நண்பரிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்றேன். அன்று முதல் எங்கள் வீட்டிலும் நாங்கள் இரவில் படுக்கப் போகும்போது கடவுளுக்கு எங்கள் கடமையைச் செலுத்துகின்றோம்.

நாம் பலரோடு பழகுகின்றோம்; பல இடங்களுக்குப் போகின்றோம். அந்தந்த இடங்களில் நாம் செய்யவேண்டிய கடமைகள் எவை என்பதைத் தெரிந்துகொள்ளுகின்றோம்.

பாடசாலையில் நமது கடமை:—வீட்டுக்கு அடுத்தபடியாகப் பாடசாலையில் நாம் பலரோடு பழகுகின்றோம். பாடசாலையும் ஒரு பெரிய குடும்பத்தைப் போலவே இருக்கின்றது. குடும்பத்துக்குத் தலைவர் தந்தை; பாடசாலைக்குத் தலைவர் தலைமை ஆசிரியர். அவருக்கு உதவியாகப் பல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அங்கே சிறுவர்கள் பலர் கல்வி கற்கிறார்கள். மாணவர்கள் பழகும் இடம் பாடசாலைதான். அந்த இடத்தைச் சுத்தமாகவும், அழகாகவும் வைத்துக்கொள்வது நமது கடமையல்லவா? பாடசாலையின் தோட்டத்தை நன்றாய்க் கவனித்து வருவதும் மாணவர்களின் கடமையாகும். மாணவர்கள் பல

ஒழுங்கான பாடசாலை

இடங்களிலிருந்து வருகிறார்கள். அதனால் பாடசாலை அடிக்கடி அசுத்தமடைகிறது. மாணவர்கள் சுத்தமாக வந்தால் பாடசாலை அசுத்தமடையுமா?

மாணவர்கள் சுத்தமான உடையுடன் பாடசாலைக்குச் செல்லவேண்டும். காலந் தவறாமல் வந்து நன்றாய்க் கற்க வேண்டும். அப்பொழுதுதான் ஆசிரியர்கள் சந்தோஷப்படுவார்கள். பெற்றோரைப் போலவே ஆசிரியர்களும் சிறுவருடைய நன்மையைக் கவனிக்கிறார்கள். மரியாதையுடன் நடந்துகொண்டு, பள்ளிக்கூடத்துச் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். பள்ளிக்கூடத்துச் சொத்துக்களைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கவேண்டும். அந்தச் சொத்துக்கள் நமது படிப்

புக்கு உதவியாக இருக்கின்றன. கற்ற பாடங்களைக் குறைந்த அறிவுள்ள மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது நமது கடமை. ஏழைகள் சுத்தமாக வரமுடியாது. அவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். காகிதக் குப்பைகளைக் குப்பைத்தொட்டியில் போடவேண்டும். வகுப்பு அறைகளைச் சுத்தமாக வைத்துக்கொண்டிருக்க வேண்டும்.

நல்ல மாணவர்கள் ஓய்வு நேரத்தில் படிப்பார்கள். அங்கு மற்றவர்கள் சென்று விளையாடுவது அவர்கள் படிப்பதைக் கெடுப்பதாகும். அப்படிச் செய்வது தப்பல்லவா ? பள்ளிக்கூடம் விட்டவுடன் நேராக நீங்கள் வீட்டுக்குப் போகவேண்டும். வழியில் கண்ட சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டும், பராக்குப் பார்த்துக்கொண்டும் செல்லுவது கூடாது. வீட்டுக்குச் சென்றபின் அங்கும் கடமைகளைச் செய்யவேண்டும்.

மற்றவர்களுக்குச் செய்யும் கடமைகள் :—மாணவர்கள் வெளியில் பலருடன் பழகுகிறார்கள். சிலர் மட்டும் தங்களுடைய கடமைகளைச் செய்தால் போதுமா ? எல்லோரும் தங்கள் கடமைகளைச் செய்தால்தான் நன்மையும் ஒழுங்கும் உண்டாகும். சிறுவரிடமும், பெரியவரிடமும், வேலைக்காரர்களிடமும், சிநேகிதர்களிடமும், வீட்டு மிருகங்களிடமும் நாம் பழகுகின்றோம். நம்முடைய கடமைகளை அவர்களுக்குச் செய்தால்தான் அவர்கள் சந்தோஷமாக இருக்கமுடியும். எல்லோரும் தங்கள் கடமைகளைச் செய்யும்படித்தூண்ட நாம் வழிகாட்டிகளாக இருக்க

வேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்கள் சுகமாகவும், சந்தோஷமாகவும் இருந்தால் நாமும் அவ்வாறே இருப்போம். விளையாடுமிடத்தில் வேறு மாணவர்களுக்கு உதவிசெய்து, விளையாட இடம் கொடுக்க வேண்டும். பெரியவர்களிடம் பணிவு வேண்டும்; சிறியவர்களிடம் அன்பு வேண்டும்; கூன், குருடு, நொண்டி முதலிய அங்கவீனர்களுக்கு நம்மால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும். ஏழையர் விடுதிகளில் அவர்களைச் சேர்ப்பது நல்லது.

நாம் பலருடன் கூடி ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு வாழ்கின்றோம். அப்படி நாம் வாழும்போது நமது கடமைகளையும், பிறருடைய கடமைகளையும் அறிந்து நடந்துகொள்ள வேண்டுமல்லவா ?

கேள்விகள்

1. குடும்பத்தின் தலைவர் யார் ?

2. பெற்றோர்களுக்கு மக்கள் செய்யவேண்டிய கடமைகள் எவை ?

3. உன் தந்தை என்ன வேலை செய்கிறார் ?

4. உன் பாடசாலையின் தலைமை ஆசிரியரின் பெயர் என்ன ?

5. உனது சிநேகிதர்களுள் மூன்றுபேர் பெயர்களை எழுது.

6. பாடசாலையில் நீ எவ்வாறு நடந்து கொள்ளுகிறாய் ?

7. மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எவை ?

———

2. சுத்தமான வாழ்க்கை

நாம் ஒருவருக்குக் கடிதம் எழுதும்போதும், ஒருவரைச் சந்திக்கும்போதும் சுகம் விசாரிக்கின்ரேம். எல்லோரையும் இப்படியே கேட்டு விசாரிக்கின்ரேம். ஏன் இவ்வாறு கேட்கின்ரேம்? எல்லோரும் நோயில்லாமல் சுகமாக இருக்கவேண்டுமென்ற ஆசையினுல்தான்.

பணக்காரன் நோயில் கஷ்டப்படுகின்ருன்; அவனுக்குப் பணமிருந்தும் சந்தோஷமாக இருக்க முடிவதில்லே. ஏழை ஒருவன் சந்தோஷமாகத் தன் கடமைகளேச் செய்கிருன்; ஏனென்ருல் அவனுக்கு நோயில்லே; அவன் உடல் நன்ருய் இருக்கிறது. நோயற்றுச் சுகமாக இருக்க என்ன செய்ய வேண்டும்? நாமும், நம்மைச் சுற்றியுள்ள பொருள்களும் சுத்தமாக இருக்கவேண்டும். சுத்தமாக இருந்தால் சுகமாக வாழலாம். சுத்தமாய் இருப்பது மிகவும் முக்கியமானதல்லவா?

நம் சுத்தம்:—உடம்பில் அழுக்குச் சேருகிறது. அதை அப்படியே விட்டால், உடல் கெட்டுவிடும்; சொறி, சிரங்கு முதலிய நோய்கள் உண்டாகும். அதனுல் நாம் தினந்தோறும் உடம்பைத் தேய்த்துக் குளிக்கவேண்டும். அழுக்கைப் போக்க சிகைக்காய்த் தூள், பயறுத்தூள், சோப்பு ஆகியவற்றை உபயோகிக்கலாம். உடல் சுத்தமாக இருந்தால் சுறுசுறுப்பு உண்டாகும்; மனத்தில் மகிழ்ச்சியும் அதிகமாகும். பற்களே மிகவும் கவனிக்கவேண்டும்; உண்ணும் உணவு பற்களினுல் அரைக்கப்பட்டு, வயிற்றுக்குள்

செல்லுகிறது. பற்கள் அழுக்காய் இருந்தால் அழுக்கும் வயிற்றுக்குள் போய்விடும். தினம் பல்லைத் துலக்கவேண்டும். தலையை அடிக்கடிச் சுத்தம் செய்து எண்ணெய் தடவி வாரவேண்டும். இல்லாவிட்டால் தலையில் பேன் பிடிக்கும். அதனால் தலையில் சொறியுண்டாகும். தலை வாரிக்கொண்டால் முகம் அழகாக இருப்பதைக் கண்ணாடியில் பாருங்கள்.

அழுக்கான உடையை அணிந்து கொண்டால் உடலும் அழுக்காய்விடும். சிலர் விலையுயர்ந்த ஆடைகளை அணிகிறார்கள். ஆனால் அதை அடிக்கடி சுத்தம் செய்வதில்லை. அவைகளில் அழுக்கு நிறைந்திருப்பதால், உடலுக்குக் கெடுதி உண்டாகிறது. ஏழை தான் உடுப்பது கந்தையானாலும் அதைக் கசக்கிக் கட்டுகிறான். அவன் ஆடை சுத்தமாக இருக்கிறது. உடல் சுத்தத்தைக் கருதுவது போல், நம் உடையின் சுத்தத்தையும் கருதவேண்டும்.

சுத்தமான வீடு:—உடலும் உடையும் சுத்தமாக இருந்தால் போதுமா? நாம் வாழும் இடமும் சுத்தமாக இருக்கவேண்டும். வாழும் வீடு சுத்தமாக இல்லாவிட்டால் நாம் சுகமாய் வாழமுடியாது.

அடுத்த பக்கத்தில் உள்ள வீட்டின் படத்தைப் பாருங்கள். சுற்றிலும் மரஞ்செடிகள், அநேக எதிர் ஜன்னல்கள் இருக்கின்றன. கண்ணாடிபோன்ற சுவர்கள்; நல்ல காற்றோட்டம். இந்த விதமான இடத்தில் வசித்தால் நோய் வருமா? திறந்த வெளியில் வீடு கட்டிக்கொண்டு வாழும் ஏழைகளைக் கவனியுங்கள். அவர்கள் சுத்தமான காற்றைச் சுவாசிக்கிறார்கள்.



சுத்தமான வீடு

வீட்டில் குப்பை கூளங்கள் அடிக்கடிசேர்ந்து விடும். நடக்கும்போது காலிலுள்ள மண் வீட்டுத் தரையில் ஒட்டிக்கொள்ளும். நாம் அடிக்கடி குப்பை களைப் போக்கவேண்டும். சுவரின் ஓரம், தட்டுமுட்டுச் சாமான்கள் வைக்குமிடம் ஆகியவற்றை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். தரையைக் கழுவ வேண்டும். குப்பைகளைச் சேர்த்து வைத்து ஓரிடத் தில் கொட்டவேண்டும். சிலந்தி முதலிய பூச்சிகள் கூடு கட்டித் தங்காதபடிக் கவனிக்கவேண்டும். வீட்டுக்குச் சுண்ணும்பு அடிக்கவேண்டும். வீட்டின் உள்ளும் புறமும் ஒழுங்காக இருக்கவேண்டும். அப் போதுதான் நாம் சந்தோஷமாக இருக்கலாம்; நம் வேலைகளையும் மிக நன்ருய்ச் செய்யமுடியும்.

மூட்டைப்பூச்சி, கரையான் ஆகிய கிருமிகள் வீட்டில் இல்லாதபடிப் பார்த்துக்கொள்ளவேண்டும். தினந்தோறும் நல்ல மணமுள்ள தூபம்போட வேண்டும். மேஜை, நாற்காலி, படுக்கை ஆகிய வற்றை அடிக்கடி வெயிலில் போட்டுவைக்க வேண்டும்.

பாடசாலையும் விளையாடுமிடமும் :—பாடசாலையைக் கவனித்தால், அதில் படிக்கும் மாணவர்களின் நடத்தையை அறிந்துகொள்ளலாம். பாடசாலை ஒழுங்காகவும் சுத்தமாகவும் இருந்தால், மாணவர்கள் பாடசாலையை வைத்திருக்கும் விதம் தெரிகிறது. அதன் மூலம் அவர்களும் ஒழுங்கானவர்கள் என்பதும் தெரியும். சுத்தமான பிள்ளைகள் பாடசாலையைச் சுத்தமாக வைத்திருப்பார்கள். பாடசாலையின் அறைகள், தோட்டங்கள், விளையாடுமிடம் ஆகியவற்றைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் சுகமாக இருக்கமுடியும். சுவர்கள் எப்பொழுதும் வெண்மையாய் இருக்க வேண்டும். சிலர் கண்டகண்ட இடங்களில் மூக்கைச் சிந்துவார்கள். அவர்களைப் பார்த்தால் யாருக்கும் அருவருப்பாயிருக்கும். உட்காரும் இடம் சுத்தமாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு உட்காரவேண்டும். அப்பொழுதுதான் உடை அழுக்காய்விடாது.

விளையாடுமிடமும் சுத்தமாக இருக்கவேண்டும். விளையாடுமிடம் திறந்தவெளியாயிருப்பதால் நல்ல காற்றும் வெளிச்சமும் படுகிறது. அந்த இடத்தில் எச்சில் துப்புவது தப்பு. அங்கு மலம் கழிக்கக்

கூடாது. ஏனென்றால் காற்றில் துர்நாற்றம் கலக்கும். விளையாடுமிடத்தில் குப்பை, கூளம், பழத்தோல் முதலியவை இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். அவைகளால் பல கெடுதிகள் உண்டாகின்றன.

பொது இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நமது வீட்டுக் குப்பையைப் பக்கத்து வீட்டின்முன் கொட்டலாமா? தெருவில் நடக்கும்போது எச்சில் உமிழ்வதும், பழத்தோலைப் போடுவதும் ஒழுங்காகுமா? சிலர் வழுக்கி விழுவதை நாம் பார்க்கிறோமல்லவா? சாக்கடை நீர் வீட்டின் அருகே தேங்கி நின்றால் கொசுக்கள் உண்டாகுமல்லவா? சாக்கடை நீரின் துர்நாற்றம் நம் வீட்டுக்குள் வீசுமல்லவா? அதனால் நோய்கள் உண்டாகி நம்மைப் பீடிக்கும். நம்மைச் சுற்றியுள்ள இடமும் சுத்தமாக இருந்தால் ஈக்களின் பயமும், நோயின் பயமும் நமக்கு ஏற்படா. இவ்விதம் சுத்தமான வாழ்வை நடத்தினால் நாம் அனைவரும் சுகமாக வாழ்ந்து, சந்தோஷமாக இருக்கலாம்.

கேள்விகள்

1. பாடசாலையை எவ்விதம் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்?
2. வீட்டையும் அதைச் சேர்ந்த இடத்தையும் சுத்தமாய் வைத்துக் கொள்வது எப்படி?
3. வகுப்பு அறையின் சுத்தத்தை எப்படிக் கவனிப்பது?
4. பொது இடங்களில் செய்யத் தகாதவை எவை?

---

3. காற்றும் நீரும்

நம் உடலும், நாம் வசிக்குமிடமும், சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்கவேண்டும் என்று தெரிந்து கொண்டோம். இனி நம் உடலுக்குள் போகும் முக்கியமான பொருள்கள் எவை என்று அறிந்து கொள்வோம். அவைகளும் சுத்தமாக இருக்க வேண்டுமல்லவா? நாம் உயிருடன் வாழ்வதற்குக் காற்றும், நீரும், உணவும் வேண்டும். அவைகள் எவ்விதமாக இருக்கவேண்டும் என்று இங்குத் தெரிந்து கொள்வோம்.

காற்று :—மாணவர்களே! விடாமல் எப்போதும் நாம் உட்கொள்ளுவது காற்றுதான். காற்றை உட்கொள்ளாவிட்டால் நம் உயிர் போய்விடும். இரவும் பகலும் விடாமல், நாம் காற்றைச் சுவாசிக்கின்றோம். அந்தக் காற்று சுத்தமாக இருக்க வேண்டும். காற்றில் பிராண வாயுவும், இன்னும் சில வாயுக்களும் கலந்துள்ளன. காற்று மூக்கின் வழியாக சுவாசக் குழாயின்மூலம் உள்ளே போகிறது. அங்குப் பிராணவாயு உடலுக்குப் பயன்படுகிறது; அசுத்த வாயு வெளிவந்து விடுகிறது.

நாம் வசிக்குமிடத்தைக் காற்றோட்டமானதாக வைத்துக்கொள்ள வேண்டும். நல்ல காற்றில் உலாவவேண்டும். இதற்காகத்தான் நாம் மாலை நேரத்தில் திறந்தவெளி, பூந்தோட்டம், கடற்கரை முதலிய இடங்களுக்குப் போகின்றோம். சிலர் முகத்தை மூடிக்கொண்டு தூங்குகிறார்கள். அது

தப்பு. இவ்வாறு செய்வதால் மூக்கின் வழியாகக் காற்று போவது தடைபடுகிறது. அதனால் நோய்கள் உண்டாகும். மரஞ்செடிகள் பகலில் நல்ல காற்றைத் தருகின்றன. அப்பொழுது மரங்களின் கீழ் இருப்பது மிகவும் நல்லது. காற்றில் தூசு கலந்திருக்கின்றது. தூசு வீட்டுக்குள் வராதபடி மெல்லிய திரைகளை ஜன்னல்களில் கட்டவேண்டும். அழுகின பழங்கள், பூத்துவிட்ட ஊறுகாய்கள் ஆகியவைகளை எடுத்து எறிந்துவிட வேண்டும். அவைகள் இருந்தால் கெட்ட நாற்றம் அடிக்கும். வீட்டில் நல்ல வெளிச்சம் படும்படி செய்யவேண்டும். அதனால் கெட்ட கிருமிகள் இறந்துவிடுகின்றன.

நீர் :—காற்றுக்கு அடுத்தது நீர். உணவில்லாமல் பலநாள் உயிர் வாழலாம். நீர் இல்லாமல் சில நாள்தான் உயிர் வாழமுடியும். நீரில்லாவிட்டால் மரஞ் செடி கொடிகளும் வளரா; எந்த ஜீவன்களும் பிழைத்திருக்கமாட்டா. நம் இரத்தத்துடன் கலந்து உடலில் எங்கும் பரவுவது நீர்தான். அதனால் நாம் பருகும் நீர் மிகவும் சுத்தமானதாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் உணவு நன்றாய் ஜீரணமாகாது. சுத்தமான நீருக்கு நிறம், மணம், ருசி ஆகியவை இல்லை. கிடைக்கும் எந்த நீரையும் குடித்துவிடக் கூடாது. பொதுவாக ஏரி, குளம் ஆகியவற்றில் இருக்கும் நீர் சுத்தமானதன்று. பாதுகாத்து வைக்கப்படும் குளத்து நீர் சுத்தமாக இருக்கும். ஒவ்வொரு கிராமங்களிலும் மாதிரிக் கிணறுகள் இருக்கின்றன. இங்குள்ள படத்தைப் பாருங்கள். கிணறு எவ்வளவு



நல்ல கிணறு

அழகாய் இருக்கிறது! பக்கத்தில் மரங்கள் இல்லை. சுற்றிலும் நீர் தேங்கவில்லை. கைப்பிடிச் சுவர் இருக்கிறது. இராட்டினம் இருக்கிறது. இந்த விதமாகத்தான் கிணற்று நீரைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

அசுத்தமான நீர்தான் காலரா முதலிய தொத்து நோய்களுக்குக் காரணம். ஆற்றுநீரும் அவ்வளவு சுத்தமானதன்று. ஏனென்றால் அநேகர் ஆற்றங்கரையில் மல ஜலம் கழிக்கிறார்கள் அல்லவா? ஆனால் ஆற்றுநீர் ஓடிக்கொண்டே இருப்பதால் தேக்கமான, நீரைவிட அது மேலானதுதான். ஆற்றுநீரை வடிகட்டிக் காய்ச்சி உபயோகிக்கலாம். முன் சொன்னவிதமான கிணற்றுநீர் மிகவும் நல்லது. ஆனால் அதைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். கிணறு சற்று வெளியில் ஒதுக்கமான இடத்தில் இருக்க வேண்டும். கிணற்றின் அருகில்

மரமிருந்தால் கிணற்றில் தழைகள் விழுந்து நீரைக் கெடுத்துவிடும். எந்த நீரையும் காய்ச்சி, வடிகட்டிக் குடிப்பது நல்லது.

இதோ இந்தக் குளத்தின் படத்தைப் பாருங்கள்! ஒரு மூலையில் மாடுகள் நிற்கின்றன. ஒரு பக்கம் ஒருத்தி பாத்திரம் துலக்குகின்ருள். மற்ருேர்



அசுத்தமான குளம்

இடத்தில் ஒருவன் குளிக்கின்ருன். வண்ணன் ஒரு மூலையில் துணிகளைத் துவைக்கின்ருன். சிலர் தண்ணீரும் எடுத்துக்கொண்டு போகிருர்கள். மரங்கள் கரையில் அடர்ந்து இருக்கின்றன. இவற்ருல்தான் தண்ணீர் கெட்டுவிடுகிறது. இதை உபயோகித்தால் நோய்கள் உண்டாவது நிச்சயம்.

மாடுகளைக் கழுவுவதால் அதன் சாணம், அழுக்கு முதலியவை நீரில் கலக்கின்றன. மனிதர்

பல் துலக்குவதாலும், துணிகளைச் சுத்தஞ் செய்வதாலும் தண்ணீர் கெடாமல் இருக்கமுடியுமா? இலைகள் விழுந்து அழுகிவிடுவதாலும் தண்ணீர் கெடுகிறது. படத்தைப் பாருங்கள்! ஒரு மாது அந்தத் தண்ணீரைக் குடத்தில் எடுத்துக்கொண்டு போகிறாள். இவ்விதமான அசுத்த நீரைப் பருகுவதால் பல நோய்கள் தோன்றி மக்களிடம் பரவுகின்றன. சுத்தமான நீர் நமது உயிரை வளர்க்கும் தன்மையுள்ளது.

கேள்விகள்

1. நீர் எப்படி எப்படிக் கெடுகின்றது?
2. நல்ல கிணறுகளை எப்படி அமைக்கவேண்டும்?
3. நல்ல நீரின் குணங்கள் எவை?
4. 'பகலில் மரத்தின்கீழ் இருப்பது நல்லது' ஏன்?
5. நாம் உட்கொள்ளும் காற்றுக்கும், வெளிவிடும் காற்றுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

---

4. உணவு

உயிர் வாழ்க்கைக்கு வேண்டியவற்றுள் மூன்றாவது முக்கியமான பொருள் உணவு. நாம் உண்ணும் உணவுதான் இரத்தமாக மாறுகிறது. அதனால் நம் உணவு மிகவும் சுத்தமானதாகவும், நல்லதாகவும் இருக்கவேண்டுமல்லவா?

நமது முக்கிய உணவுப் பொருள் அரிசி. சிலர் கேழ்வரகு, கம்பு, சோளம் முதலியவற்றையும் அரிசிபோல் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். உணவை

அநேக விதமாகப் பக்குவப்படுத்தி உண்டு வருகிறோம். உணவு நாக்குக்கு மட்டும் உருசியாய் இருந்தால் போதுமா? அது உடலுக்கும் நன்மை செய்ய வேண்டுமல்லவா? நமது உணவோடு பால், தயிர், கீரை, பருப்பு, நெய் முதலியவற்றையும் கலந்து கொள்ளவேண்டும். உணவை நன்ருக மென்று தின்னவேண்டும். குறித்த நேரத்தில் உண்ண வேண்டும். உண்ட உணவு ஜீரணமானபிறகு உண்ண வேண்டும். உணவு ஜீரணமாகச் சுமார் ஐந்து மணி நேரமாகும். அவசர அவசரமாகச் சாப்பிடக்கூடாது. அதனுல் ஜீரண சக்தி குறைந்துவிடும்; வயிற்றுவலி முதலிய வயிற்றுக் கோளாறுகள் உண்டாகும். அடிக்கடி பழங்களைச் சேர்த்துக் கொள்ளுவது மிகவும் நல்லது. சாப்பிடும் உணவு சுத்தமானதாக இருக்கவேண்டும். உணவு சுத்தமாக இருந்து, கை, வாய், பாத்திரம், இடம் இவைகள் அசுத்தமாக இருந்தால், அப்பொழுதும் உணவு அசுத்தப்படுகிறது. அதனுல் சாப்பிடுமுன் கைகால்களைக் கழுவி, வாயைக் கொப்புளிக்கவேண்டும். சாப்பிடும் இடம் மிகச் சுத்தமாக இருக்கவேண்டும்.

மறுபக்கத்தில் படத்தைப் பாருங்கள். தெருவின் ஓரத்தில் ஒருவன் தின்பண்டம் விற்கின்ருன். கடையின் அருகில் சாக்கடையிருக்கிறது. அதிலிருந்து ஈக்கள் கூட்டங் கூட்டமாகக் கிளம்பி வந்து, தின்பண்டத்தில் மொய்க்கின்றன. ஐயோ! அந்தப் பண்டத்தைச்சில சிறுவர்கள் வாங்கித் தின்கிருர்கள்.



தின்பண்டக் கடை

ஈக்களின் கால்களில் ஒட்டிக்கொண்டிருக்கிற அசுத்தமும் தின்பண்டத்தில் ஒட்டிக் கொள்ளுகின்றது. அதையும் அந்தச் சிறுவர் தின்ன வேண்டியதுதான். ஈக்கள் மலத்தின்மீதும் உட்காருகின்றன. இவ்விதத் தின்பண்டங்களை வாங்கித் தின்னுவது தப்பு அல்லவா?

படத்தைப் பாருங்கள். பண்டம் விற்பவன் அழுக்காடை அணிந்து கொண்டிருக்கிறான். அவன் கையும் அழுக்காக இருக்கிறது. அந்தக் கையினால் தின்பண்டத்தை எடுத்துத் தருகின்றான். இந்த விதமாகக் கெட்டுப்போன தின்பண்டத்தை நாம் காசு கொடுத்து வாங்கித் தின்கிறோம். இதனால் நோய்கள் உண்டாகின்றன. இது நல்லதா?

அவன் தின்பண்டத்தை மூடி வைப்பதில்லை. அதனுல் காற்றில் வரும் தும்புதூசுகள் அந்தப் பண்டத்தின்மேல் படிகின்றன. அவற்றையும் நமது சிறுவர்கள் வாங்கி வாயில் போட்டுக் கொள்ளுகிருர்கள். இந்த விதமான பண்டங்களால்தான் வாந்திபேதி, விஷசுரம் முதலிய நோய்கள் உண்டாகின்றன.

நாம் உண்ணும் உணவை மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். சீதபேதி, இருமல் முதலிய கொடிய நோய்களும் அசுத்த உணவால்-தான் உண்டாகின்றன. உணவை அசுத்தப்படுத்துவன ஈக்களும், கொசுக்களுந்தான் என்பதை நாம் உணர வேண்டும். அவைகளே நமது விரோதிகள். இந்த விரோதிகளிடமிருந்து நமது உணவைக் காக்க வேண்டும். இது தான் நமது முக்கியமான கடமை.

கேள்விகள்

1. உணவு எப்படி அசுத்தமடைகிறது?
2. ஏன் கை, கால், வாய் ஆகியவற்றைக் கழுவிய பிறகு சாப்பிட வேண்டும்?
3. அரிசி உணவோடு வேறு எவற்றைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்?
4. ஈக்களும், கொசுக்களும் என்னென்ன கெடுதல்களைச் செய்கின்றன?
5. தெருவில் விற்கும் பண்டங்களை ஏன் வாங்கித் தின்னலாகாது?

5. உடலும் ஓய்வும்

மாணவர்களே! உணவும் வீடும் சுத்தமாக இருந்து, உடல் கெட்டிருந்தால் நமக்கு நோய் வரத்தான் செய்யும். உடல் வலிவாக இருந்தால் உண்ணும் உணவு நன்ருய் ஜீரணமாகி உடலுக்குப் பயன்படும். சிலர் நன்ருய்ப் படிப்பார்கள்; ஆனல் அவர்களுக்கு உடல் வலிமை இராது; அவர்களால் வேலை செய்யவும் முடியாது. நம் உடல் உரமாக இருக்கவேண்டும். அப்போதுதான் இரத்தம் நன்ருய்ப் பரவும்.

நம் உடல் உரமாயிருக்க நாம் என்ன செய்ய வேண்டும்? தேகப்பயிற்சி செய்ய வேண்டும். "உழைக்காத உடல் உளுத்துப்போகும்" என்பது பெரியவர்களின் வாக்கு. கை, கால், கழுத்து, இடுப்பு ஆகிய அவயவங்கள் பலமடைவதற்காகச் சிறுவர்கள் ஓடி விளையாட வேண்டும். உடற்பயிற்சி செய்யாவிட்டால் உடல் நன்ருய் வளராது; கழிய வேண்டிய கழிவுப் பொருள்கள் வெளிப்படாமல் தங்கிவிடும். அதனல் பல நோய்கள் உண்டாகும். மலச்சிக்கல்தான் பல நோய்களுக்குக் காரணமானது. அதை உடல் பயிற்சியால் போக்கி விடலாம்.

அடுத்த பக்கத்திலுள்ள படத்தைப் பாருங்கள்! நாம் எத்தனையோ விதமான தேகப்பயிற்சிகள் செய்யலாம். தினந்தோறும் காலை நேரத்தில் தேகப்

விளையாட்டு

பயிற்சி செய்வது மிகவும் நல்லது. தண்டால், சடுகுடு கரணம், கயிறு சுற்றித் தாண்டுதல், தோப்புக்கரணம் போடுதல் முதலியவற்றில் பழகுதல் நல்லது. உடல் நிலைக்குத் தகுந்தபடி வேலை செய்யவேண்டும். அளவுக்கு மிஞ்சி உடற் பயிற்சி செய்தால் கெடுதி உண்டாகும். தேகப் பயிற்சி செய்த பிறகு, வியர்வை நீரை உலர்ந்த ஆடையால் துடைக்கவேண்டும். பிறகு சற்று நேரம் ஓய்வு கொள்ள வேண்டும்.

நிமிர்ந்து நடக்கவேண்டும்; நிமிர்ந்து உட்காரவேண்டும். வண்டி இழுக்கிறவர்கள், ஏர் உழுகிறவர்கள் முதலிய உழைப்பாளிகளின் அவயவங்களைப் பாருங்கள். அவர்களின் கையும், காலும் எவ்வளவு அழகாக உருண்டு திரண்டு இருக்கின்றன! அவர்

கள் செய்யும் வேலையே அவர்களுக்குத் தேகப் பயிற்சியாக இருக்கிறது.

ஓய்வு:-'ஓய்வு இல்லாத உடல் சாய்வு கொள்ளும்' என்று சொல்லுகிறார்கள். வேலை செய்துகொண்டே இருந்தால் மனம் சலித்துவிடும்; உடல் களைத்து விடும்; பிறகு இளைத்துவிடும். ஓர் இயந்திரம் ஓய்வு ஒழிவு இல்லாமல் ஓடிக் கொண்டேயிருந்தால், விரைவில் பழுதடைந்து பயனற்றுப் போகு மல்லவா? அதற்கும் ஓய்வு வேண்டும். நமது உட லும் ஒரு இயந்திரந்தான். ஓய்வும், உணவுந்தான் நம் உடலில் உண்டாகும் குறைகளைச் சரிப்படுத்து கின்றன. இதனால் உணவு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு ஓய்வும் முக்கியமாகும் என்று தெரிகிறது.

கடவுள் நமக்கு நிரந்தரமான ஓய்வுஅளித்திருக் கிறார். அதுதான் தூக்கம். நாம் தூங்குவதால் பகலில் நமது உடலிலிருந்து குறைந்துவிட்ட சத்துக் கள் சரிப்படுகின்றன; தேய்ந்துபோன உறுப்புக்கள் வளர்ந்து விடுகின்றன. தூங்கின பிறகு களைப் பும் சலிப்பும் இரா. களைப்புடன் படுத்தவன், எழுந் திருக்கும்போது சுறுசுறுப்பாக இருக்கின்றான். தூக்கம் கடவுளால் அளிக்கப்பட்ட அருமையான ஓய்வு. அதை நாம் நன்றாய்ப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வேலை செய்யும்போது களைப்பு உண்டாகிறது. அப்போது ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். அல் லது வேறுவிதமான வேலையைச் செய்தால் ஓய்வு

கொண்டதைப் போலவே பயன் உண்டாகும். சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு ஏதாவது படிக்கலாம்; கதைகள் கேட்கலாம்; சங்கீதம் கேட்கலாம்; வேடிக்கை பார்க்கலாம். இவ்விதமான ஓய்வு கொள்ளுவதும் நல்லது. சிறு பிள்ளைகளோடு விளையாடலாம். பூனை, நாய்க்குட்டி இவைகளுடன் விளையாடலாம். இவைகளெல்லாம் உடலுக்கும், மனத்திற்கும் ஓய்வு தருகின்றன.

கேள்விகள்

1. உனக்கு என்னென்ன விளையாட்டுக்கள் தெரியும்?
2. என் தேகப்பயிற்சி செய்யவேண்டும்?
3. தேகப்பயிற்சிக்கு ஏற்ற விளையாட்டுக்கள் எவை?
4. ஓய்வு கொள்வதற்கு உங்கள் வீட்டில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன?

---

6. தொத்து நோய்கள்

நம் தேசத்தில் அநேக ஆயிரம் மக்கள் கொடிய நோயால் இறந்துவிடுகிறார்கள். காலரா, அம்மை, பிளேக், டைபாயிட் முதலிய நோய்கள் மிகவும் கொடியவைகள். இவைகள் ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகின்றன. அதனால்தான் இவைகளைத் தொத்து நோய்கள் என்று சொல்லுகின்றோம். காலரா போன்ற நோய்கள் மிகவும் சீக்கிரத்தில் பரவிவிடும். இந்த நோய்களின் கிருமிகள்

ஆடை, நீர் முதலியவைகளின் மூலமாகவும், ஈக்கள், கொசுக்கள் ஆகியவைகளாலும் மற்ற வீடுகளுக்குச் சுலபமாகப் பரவுகின்றன. அதனால் அந்த வீட்டிலும் நோய்கள் உண்டாகின்றன.

அம்மை, மலேரியா, பிளேக், க்ஷயம், டைபாயிட் முதலியவைகளும் சீக்கிரம் பரவக்கூடியவை. கக்குவான், சொறி சிரங்கு, புட்டாளம்மை, சீதபேதி முதலியனவும் தொத்து நோய்களே. குழந்தைகளுக்குச் சீக்கிரத்தில் தொத்து நோய்கள் உண்டாகும். அதனால்தான் குழந்தைகளை நோயாளிகளின் அருகில் விடக்கூடாது என்று சொல்லுகிறார்கள். இனிச் சில தொத்து நோய்களைப்பற்றி விவரமாகத் தெரிந்து கொள்வோம்.

வாந்திபேதி (காலரா):—இந்த நோய் பலரைக் கொன்றுவிடுகிறது. இந்த நோய் கண்டவர்களுக்கு வாந்தியும் பேதியும் உண்டாகும். அக்கம்பக்கத்தாருக்கும் இது விரைவில் பரவிவிடும். இந்த நோய் கண்டவுடன் பரவாதபடி தடுத்துவிட வேண்டும். நோய் கண்டவர்களுக்கு உடனே நல்ல சிகிச்சை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் பிழைப்பது கஷ்டம். இந்த நோய்க்குக் காரணம் அசுத்தமான நீர்தான். காலராவைத் தடுக்கும் மருந்தை ஊசி (இனகுலேஷன்)யின் மூலம் உடலிற் செலுத்திக் கொண்டால் இந்த நோய் பரவுவது தடைபடும். ஆகாரங்களை ஈக்கள் மொய்க்காதபடி மூடிவைக்க வேண்டும். கெட்ட நீரும், ஈக்களும் இந்த நோய்க்குக் காரணமானவை.

அம்மை (வைசூரி):—இது ஒரு விகாரமான கொடிய நோய். இதனாலும் பலர் இறந்துவிடுகிறார்கள். இது அழகைக் கெடுத்து விடுகிறது. சிலருக்கு இந்த நோயால் கண் பார்வையும் கெட்டுவிடுவதுண்டு. படத்தைப் பாருங்கள். அம்மை வார்த்தவர்களின் அழகு கெட்டு விடுகிறது. அம்மை வார்த்தவர்



அம்மை வார்த்தவர்கள்

களின் மூச்சிலும் அம்மைக் கிருமிகள் கலந்திருக்கின்றன. அம்மை கண்டவரைத் தனியிடத்தில் வைக்க வேண்டும். வேப்பிலையை படுக்கை அறையிலும், நோயாளியைச் சுற்றிலும் போட்டுவைக்க வேண்டும். வேப்பிலை இந்த நோய்க்குக் கைகண்ட மருந்து. அம்மைப் பாலை ஊசியின் மூலம் உடம்பில் ஏற்றிக்கொள்ளுவது நல்லது. அது இந்த நோயைத் தடுக்கிறது.

மலேரியா (குளிர்காய்ச்சல்):—மலேரியா, ஆனைக் கால் சுரம் ஆகியவை விஷக்கிருமிகளால் உண்டா கின்றன. இந்தச் சுரங்கள் வரும்போது குளிரும் சேர்ந்து வரும். இது மிகவும் கொடியநோய். இது நமது தேக பலத்தைக் குறைத்துவிடும். இதற்கு மருந்து கொயினதான். கொயின தபால் ஆபீஸில் கிடைக்கும். கொசுக்கள்தான் இந்த நோயைப் பரப்புகின்றன. ஆகையினல் கொசு வலைக்குள் படுத்துத் தூங்கவேண்டும். வீட்டைச் சுற்றிலும், வீட்டினுள்ளும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

க்ஷயம் (இருமல்):—இதுவும் ஒரு கொடிய நோய்-தான். உடலுக்குள் இருக்கும் காற்றுப்பையைக் கெடுத்துவிடுவதால் க்ஷயரோகம் உண்டாகிறது. இந்த நோய் கண்டவர்கள் பிழைப்பது கஷ்டம். இதற்குப் புஷ்டியான உணவும், நல்ல காற்றுந் தான் முக்கியமான மருந்துகள். இந்த நோயாளி கள் உபயோகிக்கும் ஆடை, பாத்திரம் ஆகியவற் றைக் கொதி நீரில் போட்டுச் சுத்தம் செய்யவேண் டும். இந்த நோயாளிக்கு ஓய்வு மிகவும் அவசிய மானது. இந்த நோய் கண்டவர்களை இருமல் வைத்தியசாலையில் சேர்க்கவேண்டும்.

விஷக்காய்ச்சல் (டைபாயிட்):—இது ஒரு கொடிய காய்ச்சல். இந்தச் சுரம் விடாமல் 22 நாட்கள் வரையில் தொடர்ந்து இருக்கும். இதனேடு இன் னெரு வியாதியும் வரும். இந்த நோய் சீக்கிர மாகத் தொத்தும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு

இந்த நோய் கண்டால், உடனே அவரை வைத்திய சாலைக்குக் கொண்டுபோக வேண்டும். இந்த நோயாளிக்கு ஓய்வும் மருந்தும் தொடர்ந்து கவனமாக அளித்துவர வேண்டும். நோய் தீர்ந்த பிறகும் சில மாதங்கள் ஓய்வு கொள்ளவேண்டும்.

சிரங்கு :—சிரங்கும், சீதபேதியும் பூச்சிகளால் தான் உண்டாகின்றன. இவைகளுக்குக் காரணம் மலச்சிக்கல்தான். சிரங்கு கண்டவர்கள் சிகைக் காய்த்தூள், 'கார்பாலிக்' சோப்பு ஆகிய இவைகளை உபயோகிக்க வேண்டும்; நல்ல மருந்துகளைப் பூச வேண்டும். சீதபேதிக்கு உடனே உள்ளுக்கு மருந்து அருந்த வேண்டும். தக்கமருந்து உண்டால் சீதபேதி சீக்கிரம் குணமாகிவிடும்.

கண்ணோயும் ஒரு தொத்து நோய்தான். கண்ணோயுள்ளவர்கள் வெளிச்சத்தை நன்ருகப் பார்க்க முடியாது. ஈக்கள், கொசுக்கள் முதலியவைகளால் இந்த நோய் பரவுகிறது. கண்நோய் உள்ளவர் தம் கண்ணில் தூசுபடாமல் கவனித்து வரவேண்டும். மருந்து அல்லது விளக்கெண்ணெயைக் கண்ணுக்குப் போடலாம்.

உடல் பலமாயிருக்க, உடல்பயிற்சி செய்ய வேண்டும்; நன்ருய் உழைக்கவேண்டும்; விளையாட வேண்டும் என்று படித்தோம். நோய் வராதபடி பாதுகாத்துக்கொள்ளுவதுதான் மிகவும் மேலானது. வந்தபிறகு கஷ்டப்படுவதைவிட, வராமல் தடுப்பது நல்லதல்லவா ?

கேள்விகள்

1. அம்மை நோய் வராதபடி தடுக்க என்ன செய்வாய்?

2. க்ஷயம் கண்டவர்களை எப்படிக் கவனிக்க வேண்டும்?

3. மலேரியாக் காய்ச்சல் எவ்விதம் பரவுகிறது?

4. வாந்திபேதி வரக் காரணம் என்ன?

5. தொத்து நோய் என்றால் என்ன?

---

7. சுகாதார விதிகள்

உடல்சுகம், மனமகிழ்ச்சி இவை இரண்டும் பெற வேண்டுமானால் நாம் தினந்தோறும் சில சுகாதார விதிகளை அனுசரித்து நடக்கவேண்டும். அந்த விதிகள் எல்லோருக்கும் நன்மையே செய்யும். சிறுவர் முதல், முதியவர் வரையில் சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும். சில பொதுவான சுகாதார விதிகளை இங்குத் தெரிந்து கொள்வோம்.

1. காலையில் எழுந்து மலங்கழிக்க வேண்டும். மலம் தினந்தோறும் தவறாமல் கழிந்தால் எந்த நோயும் வராது. வந்தாலும் நெடுநாள் இராது. மலச்சிக்கலில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். காலையில் தேகப்பயிற்சி செய்யவேண்டும். மலம் நன்றாய்க் கழிவதற்கு முதல் காரணம், உடல் பயிற்சியும், அதிகாலையில் விழித்து எழுவதுமே யாகும்

எழுந்த பிறகு நல்ல நீர் பருகவேண்டும். தேகப் பயிற்சிக்குப் பிறகு ஆடையால் உடலைத் துடைக்க வேண்டும்.

2. பல்லை நன்ருய்த் துலக்கவேண்டும். கை கால்களைக் கழுவவேண்டும். காலையில் நீராடுவது மிகவும் நல்லது. குச்சியால் பல் துலக்கவேண்டும். 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி' என்பது பழமொழி. வேலங்குச்சியும், ஆலம் விழுதும் பல் துலக்க மிகவும் ஏற்றவை. கண்டகண்ட பற்பொடிகளை உபயோகிக்கக் கூடாது. நாகரிகமான பல்பசைகளும் ஏற்றவையல்ல. உப்புத்தூள், பாதம்தோலைக் கரித்துச் செய்யப்படும் தூள் முதலியவை பல் துலக்க மிகவும் ஏற்றவை.

3. ஆடைகள் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும். சுத்தமான நீரில் நீராடியபின், கந்தையானுலும் அழுக்குப் போகத் தோய்த்து உடுத்த வேண்டும். 'கந்தையானுலும் கசக்கிக் கட்டு' என்பது பழமொழி. ஆடை அழுக்காகவும், உடல் சுத்தமாகவும் இருந்தால் என்ன பயன்?

4. சுத்தமான காற்றும், நல்ல உஷ்ணமும் படும் இடத்தில் உலாவ வேண்டும். காற்றைச் சுவாசிக்க மூக்குதான் தகுந்தது. அதனுல்தான் காற்றில் கலந்துள்ள தூசை உட்செல்லாதபடி தடுக்க முடியும். இதற்காகவே மூக்கினுள் உரோமங்கள் இருக்கின்றன; மூக்கின் ஓரமாக ஒருவிதப் பசையும் உண்டு.

5. உணவை உண்ணும்போது அவசரமில்லாமல் நன்ருய் மென்று உண்ணவேண்டும். உண்ணும்பொழுது அடிக்கடி நீர் பருகக் கூடாது. பழைய உணவு, வேகாத உணவு முதலியவற்றையும், அழுகின, வெம்பின பழங்களையும் தின்னக்கூடாது.

6. நீரைக் காய்ச்சி வடிகட்டிப் பருகவேண்டும். காபி, தேயிலை முதலிய பானங்கள் உடல் நன்மைக்குப் பொருந்தாதவை. தண்ணீர்தான் கடவுளால் கொடுக்கப்பட்ட இயற்கையான பானம்.

7. ஓய்வு மிகவும் முக்கியமானது. நித்திரையும் ஒவ்வொரு உயிர்ப்பிராணிக்கும் அவசியமானது. அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்திருக்கப் பழகவேண்டும். இரவில் அயர்ந்து தூங்கவேண்டும். நெடுநேரம் கண் விழிக்கக் கூடாது. கண்விழித்தல் உடல் நலம் கெடும்.

கேள்விகள்

1. தேக சுகத்திற்கும், மனமகிழ்ச்சிக்கும் ஆதாரமானவை எவை?

2. உடை, உணவு இவற்றைக் குறித்து நாம் என்ன தெரிந்துகொள்ள வேண்டும்?

3. எத்தகைய பொருள்களை உண்ணலாகாது?

4. எந்தெந்த விதங்களில் நாம் ஓய்வு கொள்ள வேண்டும்?

5. நீ இரவில் எப்பொழுது படுக்கைக்குச் செல்லுகிருய்? காலையில் எப்பொழுது எழுந்திருக்கிருய்?

8. கிராமமும் கிராம ஆட்சியும்

நமது உடலில் அநேக அவயவங்கள் இருக்கின்றன. அவைகளின் உதவியால் நமது உடல் சுகமாக இருந்துகொண்டு, தினந்தோறும் வேலைகள் செய்கின்றது. அதுபோலவே நமது தேசமும் அநேக பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. நமது தேசம் இந்தியா. இந்தத் தேசத்தில் சரியாக ஆட்சி நடக்கவும், ஒழுங்காக மக்கள் வாழவும் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். தேசம் அநேக மாகாணங்களாகவும், மாகாணங்கள் அநேக ஜில்லாக்களாகவும், ஜில்லாக்கள் அநேக தாலூகாக்களாகவும், தாலூகாக்கள் அநேக பிர்க்காக்களாகவும், பிர்க்கா அநேக ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. நமது தேசத்தின் மேன்மைக்குக் கிராமந்தான் மிக முக்கியமானது. கிராமத்தின் அமைப்பு, ஆட்சி இவைகளைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் அல்லவா? இதனால் உடலின் ஆட்சியும், ஊரின் ஆட்சியும் ஒன்றுபோல் இருப்பதைப் பார்க்கின்றோம்.

கிராமம் :—கிராமத்தில் அநேக வீடுகளும், பாடசாலையும், கோயிலும், குளமும் இருக்கும். ஒரு வீட்டை மட்டும் குடும்பம் என்கிறோம். ஆனால் கிராமத்தில் பல குடும்பங்கள் உண்டு. வீட்டின் தலைவர் தந்தை என்று படித்தோம். கிராமத்தின் தலைவருக்கு மணியக்காரர், அல்லது கிராம முன்சீப் என்று பெயர். அவருக்கு உதவியாகச் சிலர் வேலை

செய்கிறார்கள். சில கிராமங்களில் பஞ்சாயத்துச் சபைகள் இருக்கின்றன.

கிராம முன்சீப் :—இவரை மணியக்காரர் அல்லது கிராமாதிகாரி என்று சொல்லுவது வழக்கம். கிராம சம்பந்தமான வேலைகளை இவர்தான் கவனித்து வருகிறார். அரசர் நாட்டை ஆளுகிறார். அரசருடைய பிரதிநிதியாகக் கிராமத்தை ஆளுகிறவர் மணியக்காரர்தான். இவர் நிலவரியைக் குறித்த

கிராம அதிகாரி

காலத்தில் வசூல் செய்து, அந்தத் தாலூகாவிலுள்ள கஜானாவுக்கு அனுப்புகிறார். ஏரி, குளம், குட்டை, பாடசாலை இவைகளைக் கவனிக்கிறார். ஜனன மரணக்கணக்கை எழுதி அனுப்புகிறார். 20 ரூபாய்க்கு உட்பட்ட 'சிவில்' வழக்குகளை விசாரிக்கிறார். கிராம சுகாதாரத்தைக் கவனித்துக் கிராமத்தின் தந்தை

யாக இருந்துகொண்டு, கிராம மக்களைக் காத்து வருகின்றார். இவருக்கு அரசாங்க ஊதியம் உண்டு.

கணக்குப்பிள்ளை :—இவர் கிராமக் கணக்குகளைப் பார்த்து வருகிறார். இவருக்கும் அரசாங்கச் சம்பளம் உண்டு. நிலங்களை அளந்து நன்செய், புன்செய், கரம்புகள் ஆகியவற்றைக் கணக்குப் புத்தகத்தில் குறித்து வைக்கிறார்; விளைவு விவரத்தையும் எழுதி வைக்கிறார். தலையாரியும், வெட்டியானும் இவருக்கு உதவியாக இருக்கிறார்கள்.

தலையாரி, வெட்டியான்:—இவர்கள் மணியக்காரர், கணக்குப்பிள்ளை ஆகியவர்களுக்குக் கீழ்ப்பட்ட கிராம ஊழியர்கள். இவர்களுக்கும் ஊதியம் உண்டு. கிராமக்காவல், தண்டோரா போடுதல், கஜானாவுக்குப் பணம் எடுத்துக்கொண்டு போதல் முதலியவை இவர்களுடைய வேலைகள். இவர்கள் சரியாக வேலை செய்யாவிட்டால் கிராமம் கெட்டுவிடும். இவர்களுடைய சம்பளம் மிகவும் குறைவு. இந்த உத்தியோகங்கள் யாவும் வாழையடி வாழையாக வருவனவாகும்.

கேள்விகள்

1. கிராமத் தலைவருக்கு உள்ள வேறு பெயர்கள் எவை?
2. மணியக்காரருக்கு உதவியாக உள்ளோர் யாவர்?
3. மணியக்காரரின் வேலை என்ன?
4. தோட்டிகளின் வேலைகள் எவை?
5. கணக்குப்பிள்ளை என்ன வேலை செய்கிறார்?

---

9. கிராம சபைகள்

சிறிய கிராமத்தைக் கவனிக்க கிராம முன்சீப் ஒருவரே போதுமானவர். ஆனால் பெரிய கிராமமாக இருந்தால், கிராம காரியங்களைக் கவனிக்கச் சில சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சபைகளை அரசாங்கத்தார் கண்காணித்து வருகிறார்கள். முன் காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்துச் சபைகள் இருந்தன. அந்தச் சபைகள் கிராம வழக்குகளையெல்லாம் விசாரித்துத் தீர்ப்பு கூறுவது வழக்கம். இக்காலத்தில் பஞ்சாயத்துச் சபை, கூட்டுறவுச் சங்கம், பஞ்சாயத்து நீதிச்சபை, காட்டு இலாகா பஞ்சாயத்துச் சபை ஆகிய சபைகள் இருக்கின்றன. இந்தச் சபைகளுள் கிராமத்தின் நிலைக்குத் தகுந்தபடி ஒன்று அல்லது இரண்டு சபைகள் அமைந்திருக்கும்.

கிராமப் பஞ்சாயத்துச் சபை:—இந்தக் கிராமப் பஞ்சாயத்துச் சபையில் ஜனத்தொகையை அனுசரித்துப் பதினாறு பேர் வரையில் அங்கத்தினர்கள் இருப்பார்கள். கிராம மக்கள்தான் இந்தப் பஞ்சாயத்தாரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இந்தச் சபைக்குத் தொழில் வரி, வீட்டுவரி போன்ற வரிகளை வசூல் செய்ய அதிகாரம் உண்டு. இந்தச் சபையின் செலவுக்கு அரசாங்கமும் பொருளுதவி செய்கிறது. வரி வசூல் செய்த தொகையைக்கொண்டு புது ரஸ்தாக்கள் போடுவதும், தெருக்களைப் பழுது பார்ப்பதும்,

சிறுவர் சிறுமியர்களுக்குப் பாடசாலை ஏற்படுத்துவதும் இதன் வேலைகள். புத்தகசாலை, உடற்பயிற்சிச் சாலை ஆகியவையும் சில பெரிய கிராமங்களில் ஏற்பட்டிருக்கின்றன. விளக்குப் போடுதல், கக்கூஸ் கட்டுதல் முதலியவற்றையும் இச்சபையார் கவனிக்கலாம். கிராமத்தின் பண வருவாய்க்குத் தகுந்தபடி கிராமத்தை நல்ல நிலைமைக்கு உயர்த்தக்கூடிய காரியங்களையெல்லாம் செய்ய இந்தச் சபைக்கு உரிமையுண்டு. இதைக் கவனிக்க ஜில்லா அதிகாரி ஒருவரை அரசாங்கத்தார் நியமித்திருக்கிறார்கள்.

பஞ்சாயத்து நியாய சபை:—சில கிராமங்களில் கிராம நியாயசபைகளும் இருக்கின்றன. இந்தச் சபையில் ஐந்து முதல் பன்னிரண்டு வரையில் அங்கத்தினர்கள் இருப்பார்கள். இவர்களைக் கிராமவாசிகள்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். இச்சபை குற்றங்களையும், வழக்குகளையும் விசாரிக்க உரிமை பெற்றிருக்கிறது. இந்தச் சபையில் நடக்கும் வழக்குக்குக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. வக்கீலுக்கும் பேசும் உரிமையில்லை. ஏழைகள் பணச் செலவில்லாமல் தம் வழக்குகளைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு இந்தச் சபை மிகவும் உதவியாக இருக்கிறது. மேற்சொன்ன கிராம சபைகளில் உள்ள அங்கத்தினர்களுக்கு எவ்விதமான சம்பளமும் கிடையாது. இந்தச் சபையாரைக் கிராம மக்களே தேர்ந்தெடுக்கிறார்கள்.

காட்டு இலாகா பஞ்சாயத்துச் சபை:—காட்டு இலாகா பஞ்சாயத்துச் சபையும் கிராம வாசிகளுக்கு

மிக்க நன்மை செய்கிறது. கிராமத்திலுள்ளவர்கள் இதற்கு அங்கத்தினர்களைத் தேர்ந்து எடுக்கிறார்கள். காடுகளின் நிர்வாகம் இந்தச் சபையின் பொறுப்பில் இருக்கிறது. கால்நடைகளை மேய்க்க அனுமதிச் சீட்டுக் கொடுப்பது இந்தச் சபைதான். மேய்ச்சல் வரி வாங்குவதும் இந்தச் சபைதான். விறகு, தழைக்கட்டு ஆகியவற்றைக் காடுகளிலிருந்து வெட்டிக்கொண்டு வருவதற்கு இச்சபை அனுமதிச் சீட்டுக் கொடுக்கிறது; அதற்கு வரியும் வாங்குகிறது. காடுகளில் அனுமதியில்லாமல் கால்நடைகளை மேய்க்காதபடி பார்த்துக் கொள்ளவும், மரங்களை எவரும் வெட்டாதபடி பார்க்கவும் காவற்காரர்களை அமர்த்துவதும் இந்தச் சபைதான். காட்டுக் காவல்காரர்களுக்குச் சம்பளம் உண்டு.

இவ்விதமாக நாமே நமது கிராம காரியங்களைக் கவனித்து ஆட்சி நடத்திக்கொள்ள இவ்விதச் சபைகளை ஏற்படுத்தி, அவற்றை நடத்தும் உரிமையையும் நமக்கு அரசாங்கம் கொடுத்திருக்கிறது.

கேள்விகள்

1. கிராம சபைகள் எவை ?
2. காட்டுஇலாகா பஞ்சாயத்துச் சபையின் வேலை என்ன ?
3. உங்கள் கிராமத்தில் என்னென்ன சபைகள் உண்டு?
4. உங்கள் ஊர்ப் பஞ்சாயத்துச் சபையின் தலைவர் யார் ?

---

10. கூட்டுறவுச் சங்கம்

மாணவர்களே! நமது தேசத்தில் சுமார் ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. நமது தேசத்தின் முக்கியமான தொழில் பயிர்த்தொழிலே. ஆனால் நம் நாட்டின் குடியானவர்கள் மிகவும் ஏழைகளாக இருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்கள் தமது பயிர்த்தொழிலைக் கிரமமாக நடத்தி இலாபம் அடைய முடியவில்லை. அதிக வட்டிக்குக் கடன் வாங்கி, வட்டி செலுத்த முடியாமல், கடன் பளு அதிகமாகிக் கடைசியில் நிலத்தையும் விற்கும்படி நேர்ந்து விடுகிறது.

இந்தக் கஷ்டத்தைப் போக்கவே அரசாங்கத்தார் கூட்டுறவுச் சங்கங்களை அநேக கிராமங்களில் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்தச் சங்கங்களை அரசாங்க அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள். கிராமத்தார் ஒன்றுகூடி உறவுகொண்டு இந்தச் சங்கங்களை நடத்துகிறார்கள். கிராமத்தார் அனைவரும் இந்தச் சங்கத்தில் சேரலாம். ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லை. கிராமத்தாருள் சிலரைத் தேர்ந்தெடுத்துச் சங்கத்தை நடத்த ஏற்பாடு செய்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் ஒருவர் தலைவராகவும், மற்றொருவர் காரியதரிசியாகவும் இருந்துகொண்டு சங்கத்தை நடத்துகிறார்கள். இந்தச் சங்கத்தில் பங்குப் பணம் கட்டு

கிருர்கள். சிலர் மொத்தமாகத் தங்கள் பணத்தை வட்டிக்காக இந்தச் சங்கத்தில் போட்டு வைப்பதும் உண்டு. இந்த இரண்டு தொகையோடு, அரசாங்க மத்திய பாங்கியிலிருந்து கொடுக்கப்படும் பணமும் சேருகிறது.

இவ்வாறு சேரும் மொத்தத் தொகையிலிருந்து குடியானவர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. இதற்கு மிகவும் குறைந்த வட்டியே வாங்குகிருர்கள். கடன் தொகையைக் கொஞ்சங் கொஞ்சமாகச் செலுத்தலாம். இதனல் குடியானவருக்கு நஷ்டமில்லை. சங்கத்தின் செலவு போக மிகுந்த லாபத்தை எல்லா அங்கத்தினருக்கும் பங்கிட்டுக் கொடுக்கிருர்கள். குடியானவர்கள் நிலம், ஆடு மாடு, உழவுக் கருவிகள், விதை, துணிமணிகள் ஆகியவற்றையும் இந்தச் சங்கத்தின் மூலமாகவே கடனக வாங்கிக் கொள்ளலாம். கிராமத்தில் விளையும் விளைபொருள்களையும் ஒன்று சேர்த்து இந்தச் சங்கத்தின் மூலமாக விற்கலாம். அப்படி விற்பதால் நல்ல விலைக்கு விற்க முடிகிறது.

இந்தச் சங்கத்தால் கிராமத்தில் ஒற்றுமை உண்டாகிறது. குடியானவர் கடனளியாகி விளைந்ததைக் கடனுக்குக் கொடுத்துவிட்டு, மறுபடியும் கடன் வாங்க வேண்டியதில்லை. இந்த விதமான சங்கங்கள் ஆயிரக்கணக்காக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் குடியானவருடைய கஷ்டம் நீங்கும். கிராமங்கள் செழிப்பாக இருந்தால் பட்டணங்

களும் நகரங்களும் செல்வமாக இருக்கும். மக்களிடையே நாகரிகம் பரவி வளரும்; அதனால் எல்லோரும் இன்புற்று வாழலாம்.

கேள்விகள்

1. நம் நாட்டின் முக்கியமான தொழில் எது?

2 நம் குடியானவர்கள் ஏழைகளாகவே இருக்கக் காரணம் என்ன?

3. கூட்டுறவுச் சங்கம் செய்யும் உதவி யாது?

---

11. முனிஸிபாலிடி

கிராமங்களில் இன்னின்ன சபைகள் இருக்கின்றன என்று தெரிந்து கொண்டோம். கிராம ஆட்சி எவ்வாறு நடைபெறுகிறது என்றும் தெரிந்து கொண்டோம். கிராமங்களைவிடப் பெரிய ஊர்கள் இருக்கின்றன. அவைகளில் ஜனத்தொகை அதிகம். நான்கு ஐந்து கிராமங்கள் சேர்ந்தால் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு பெரியதாயிருப்பது பேரூர். அப்படிப்பட்ட பேரூர்களை நகரம் என்று சொல்லுகின்றோம். நகரங்களில் அநேக பாடசாலைகள் இருக்கும்; வியாபாரம் அதிகமாக நடைபெறும்; வியாபாரிகள் அதிகமாக வசிப்பார்கள்; வீடுகளும் மாளிகைகளும் அதிகமாயிருக்கும்; தெருக்

கள் அகலமாகவும், அழகாகவும் இருக்கும்; வைத்திய சாலைகளும், போக்குவரவு சாதனங்களும் அங்கு அதிகம். இந்த விதமான நகரங்களில் எந்த விதமான ஆட்சி நடக்கிறது, கிராம சபைகளைப் போன்ற சபைகள் இருக்கின்றனவா என்பவைகளைப்பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியமல்லவா? நகரங்களிலும் பரிபாலன சபைகள் இருக்கின்றன. அவைகள்தான் நகரங்களின் வசதிகளைக் கவனித்து வருகின்றன. வேலூர், திருவண்ணாமலை, சிதம்பரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலிய பெரிய நகரங்களில் பரிபாலன சபைகள் இருக்கின்றன. நகரங்களில் சில மிகவும் பெரியவையாக இருக்கும். உதாரணமாக நமது சென்னை நகரத்தைச் சொல்லலாம். சென்னை நகரத்தைப்பற்றி அடுத்த பாடத்தில் படிப்போம். இப்பொழுது நகரங்களில் பரிபாலன சபை எவ்வாறு நடைபெறுகின்றது என்பதைத் தெரிந்து கொள்வோம். நகர பரிபாலனத்தை ஆங்கிலத்தில் 'முனிஸிபாலிடி' என்று சொல்லுவார்கள்.

இந்தச் சபையில் கிராம சபையில் இருப்பதை விட அதிகமான அங்கத்தினர்கள் இருப்பார்கள். ஜனத்தொகைக்குத் தக்கபடி பதினறு பேருக்குக் குறையாமல் அங்கத்தினர்கள் இருப்பார்கள். இவர்களுக்குக் 'கவுன்சிலர்' என்று பெயர். இவர்களை அந்தந்த நகர வாசிகளே தேர்ந்தெடுக்கிறார்கள். ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் மூன்று வருஷ காலம் அப்பதவியை வகிக்கலாம்.

இந்தச் சபையின் தலைவருக்குச் 'சேர்மன்' என்று பெயர்.

வேலைகள் :—முனிஸிபல் எல்லைக்கு உள்பட்ட இடத்தில் தெருக்கள் ஏற்படுத்துதல், சுத்தத்தைக் கவனித்தல், சாக்கடை, காய்கறிக் கடைகள், வாசக சாலைகள், பூந்தோட்டங்கள், பாடசாலைகள் ஆகியவற்றை அமைத்து மக்களுக்கு வசதிகளைச் செய்தல், வைத்தியசாலைகளை ஏற்படுத்துதல், கக்கூஸ் அமைத்து அவ்வப்போது சுத்தப்படுத்துதல், தெருக்களில் விளக்குப் போடுதல் முதலிய காரியங்களை இச்சபை செய்கின்றது. ஒவ்வொரு முனிசிபாலிடியிலும் முனிசிபல் சபையின் காரியங்களை நடத்துவதற்கும், முனிசிபல் சபையாருக்கு உதவியாக இருப்பதற்கும் 'கமிஷனர்' என்னும் அதிகாரி இருக்கிறார். இந்தக் கமிஷனருக்குச் சம்பளம் உண்டு. முனிசிபல் சபையின் தலைவர், உபதலைவர், அங்கத்தினர் ஆகிய இவர்களுக்குச் சம்பளமில்லை.

முனிசிபல் சபையின் காரியத்தைச் செய்வதற்குப் பணம் எப்படிக் கிடைக்கிறது? வீட்டு வரி, தண்ணீர் வரி, ஓட்டல் வரி, கடைவரி, தொழில் வரி முதலான வரிகளை விதித்து, அவ்வரிகளால் வரும் பணத்தைக்கொண்டு நகரப் பொதுக் காரியங்களை இச்சபை நடத்திவருகிறது.

கவுன்சிலர்களுக்குச் சம்பளமில்லை என்று முன்பே அறிந்தோம். அவர்கள் பொது நன்மைக்கு உழைப்பதற்கென்றே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

நமக்குத் தந்தை எப்படியோ அதுபோலவே கவுன்சிலர்கள் முனிசிபாலிடியின் தந்தைகளாக இருக்கிறார்கள். மாணவர்களே! நீங்களும் கவுன்சிலர்களாக இருக்க ஆசைப்படுகிறீர்களா? நீங்கள் நன்றாய்ப் படித்த பிறகு கவுன்சிலராக அமருங்கள். அப்பொழுது ஏழைகளின் குறைகளைப் போக்க முயலுங்கள்.

கேள்விகள்

1. முனிசிபாலிடியின் வேலை என்ன?
2. முனிசிபல் சபைக்கு எவ்விதத்தில் வரும்படி வருகிறது?
3. நீ கவுன்சிலரானால் உன் ஊருக்கு என்னென்ன நன்மை செய்வாய்?

---

12. சென்னை நகர சபை

முனிஸிபாலிடியுள்ள பட்டணங்களில் வசிக்கும் ஜனத்தொகையைவிட பல மடங்கு அதிகமாக ஜனத்தொகை இருக்கும் நகரங்களின் பரிபாலன சபைக்குக் 'கார்ப்பொரேஷன்' என்று பெயர். சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய மூன்றும் நமது நாட்டிலுள்ள பெரிய நகரங்கள். சென்னை நமது மாகாணத்திலுள்ள பெரிய நகரம். இவ்விதமான பெரிய நகரத்தில் பெரிய அளவில் நகர பரிபாலன சபை ஏற்பட்டிருக்கிறது. இந்தச்சபையே 'கார்பொரேஷன்' எனப்படுவது. சென்னை நமது மாகாணத்தின் தலை

நகரமும் ஆகும். இந்த நகரத்தில் தான் கவர்னர் இருக்கிறார்.

அடுத்த பக்கத்திலுள்ள படத்தைப் பாருங்கள். இதுதான் சென்னை நகர சபை இருக்கும் கட்டிடத்தின் படம். இதற்கு ரிப்பன் கட்டிடம் என்று பெயர். சென்னை மாகாண கவர்னராயிருந்து, பல நன்மைகள் புரிந்தவர் லார்ட் ரிப்பன் என்பவர். அவர் பெயரால் இக்கட்டிடம் கட்டப்பட்டது.

சென்னையில் இப்பொழுது சுமார் 12 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இந்த நகரத்தை 40 வட்டாரங்(டிவிஷன்)களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் ஒரு கவுன்சிலரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இந்தக் கவுன்சிலர்கள் தமக்குள் ஒருவரை நகர சபைத்தலைவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுகிறார்கள். இந்தத் தலைவருக்கு 'மேயர்' என்று பெயர். நகர சபையின் கடமைகளை நடத்திவைக்கக் கமிஷனர் ஒருவர் இருக்கிறார். மேயருக்கு அடுத்தாற்போல் ஓர் உதவி மேயரும் இருக்கிறார்.

இப்போது சென்னையின் கமிஷனராக இருப்பவர் J. P. S. ஷெனாய், ஐ. ஸி. எஸ். என்பவராவார். இவர் அநேக இலாகாக்களைக் கவனித்து வருகிறார். ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒரு தலைவர் உண்டு. கார்ப்பொரேஷனும், முனிசிபாலிடியைப் போன்றதுதான். ஆனால், கார்ப்பொரேஷன் செய்துவரும் வேலைகள் அதிகம். அதற்குத் தகுந்தபடி வரும்படியும் அதிகமாயிருக்கிறது.



சென்னை நகரசபைக் கட்டிடம்

கேள்விகள்

1. இப்பொழுது சென்னை நகர மேயராக இருப்பவர் யார்?
2. இச்சமயம் சென்னைக் கார்ப்பொரேஷன் கமிஷனராக இருப்பவர் பெயர் என்ன?
3. கமிஷனரின் வேலை என்ன?
4. முனிஸிபாலிடிக்கும் கார்ப்பரேஷனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
5. உங்கள் டிவிஷன் கவுன்சிலர் யார்?
6. நீ இருப்பது எத்தனையாவது டிவிஷன்?

---

13. ஜில்லாக்களும் ஜில்லா சபைகளும்

நமது மாகாணம் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாக்களுக்கு அடங்கி அநேக சிறிய கிராமங்களும், சில பட்டணங்களும் இருக்கின்றன. கிராமத்தின் அதிகாரி கிராம முனிசீப் என்று நமக்குத் தெரியும். அதுபோலவே ஜில்லாவுக்கு அதிகாரி கலெக்டர். கலெக்டர்தான் கவர்னருக்குப் பதிலாக ஜில்லாவின் காரியங்களைக் கவனிக்கிறார். ஜில்லா பல தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தாலுக்காவுக்கு அதிகாரி தாசில்தார். தாலுகாவின் உட்பிரிவாகிய பிர்க்காவுக்குத் தலைவர் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்.

நமது மாகாணம் 25 ஜில்லாக்களைக் கொண்டது. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு கலெக்டர் உண்டு. இவர் நிலவரி, நியாய பரிபாலனம் ஆகியவற்றைக்

கவனிக்கிறார். ஜில்லாவின் மற்ற அலுவல்கள் பல இலாகாக்களால் கவனிக்கப்படுகின்றன. போலீஸ் இலாகா, கல்வி இலாகா, சுகாதார இலாகா போன்ற இலாகாக்களுக்குத் தனித்தனியாகத் தலைவர்கள் உண்டு. இதுபோலவே காட்டு இலாகா, ஜில்லா பஞ்சாயத்து இலாகா முதலியவைகளும் இருக்கின்றன. இவைகளுக்கும் தனித்தனியே தலைவர்கள் உண்டு.

ஜில்லாவின் முக்கியமான அதிகாரி கலெக்டர்-தான். இவருக்கு உதவியாக டெபுடி கலெக்டர், தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், ஜில்லா மாஜிஸ்ட்ரேட், டெபுடி மாஜிஸ்ட்ரேட், சப் மாஜிஸ்ட்ரேட் முதலியோர் இருக்கிறார்கள்.

நிலவரி இலாகா:—ஜில்லாவிலுள்ள எல்லாக் கிராமங்களிலிருந்தும் நிலவரி வசூல் செய்து அரசாங்கத்துக்கு அனுப்புவது இந்த இலாகாவின் வேலை. இந்த இலாகாவின் அதிகாரியாக இருப்பவர் கலெக்டர்தான். கலெக்டருக்குக் குற்ற விசாரணை செய்யும் அதிகாரமும் உண்டு. சட்டதிட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருபவரும் கலெக்டர்தான். இந்த விஷயத்தில் இவருக்குப் போலீஸ் இலாகா உதவியாக இருக்கின்றது.

நீதி இலாகா :—ஜில்லாவில் ஏற்படும் வழக்குகளை விசாரணை செய்வது இந்த இலாகாதான். ஜில்லா நீதிபதி ஒருவர் இருக்கிறார். கீழ்க்கோர்ட்டுகளில் முடிவான வழக்குகளும், ஜில்லா நியாயாதிபதிகளால் மறுபடியும் விசாரிக்கப்படலாம். நீதிபரிபாலன

காரியங்களுக்கு ஜில்லா நீதிபதியே பொறுப்பாளி யாவார்.

கல்வி இலாகா:—இந்த இலாகா எல்லாப் பாடசாலைகளையும் அவை சரிவர நடக்கின்றனவா என்று மேற்பார்த்து, ஜில்லா போர்டுகளின் பாடசாலைகளைக் கண்காணித்து வருகிறது. இந்த இலாகாவுக்கும் ஒரு அதிகாரி இருக்கிறார். இவருக்கு உதவியாகச் சில 'டெபுடி இன்ஸ்பெக்டர்'களும் இருக்கின்றார்கள்.

சுகாதார இலாகா:—இதற்கும் ஒரு தலைவர் இருக்கின்றார். இவருக்கு உதவியாகப் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். சுகாதார விஷயமாக அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்வதும், அரசாங்கக் கட்டளையின்படி சுகாதாரத்தைக் கவனிப்பதும் இவர் வேலை. தொத்து நோய்கள், அம்மை முதலிய கொடிய நோய்கள் பரவாதிருக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதும், பரவின இடத்தில் அதைப் போக்கடிப்பதும் இவர் வேலைகள்.

போலீஸ் இலாகா:—இந்த இலாகாவின் தலைவர் ஜில்லா போலீஸ் சூபரின்டென்டென்ட். இவருக்கு உதவியாக டெபுடி சூபரின்டென்டென்ட், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், கான்ஸ்டேபிள்கள் முதலியோர் இருக்கிறார்கள். அரசாங்க சட்டதிட்டங்கள் நடைபெறவும், கலகம் திருட்டு முதலியவை நேராமல் இருக்கவும், குற்றவாளிகளைப் பிடித்து விசாரணைக்குக் கொண்டு வரவும் செய்வது இந்த இலாகாவின் வேலை.

ஜில்லா போர்டுசபை :—இது கிராமப் பஞ்சாயத்துச் சபையைப் போன்ற அமைப்பை உடையது; ஆனால் அளவில் பெரியது. இந்தச் சபையில் அநேக அங்கத்தினர் இருக்கிறார்கள். இவர்கள் ஜில்லா முழுவதும் இருக்கும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஜில்லாச் சபைக்குத் தலைவர் ஒருவர் உண்டு. அவரைப் போர்டு அங்கத்தினரே தேர்ந்தெடுக்கிறார்கள்.

முனிசிபாலிடி, கார்பரேஷன் போன்ற சபைகளைப் போலவே ஜில்லா போர்டு சபையும் ஜில்லா முழுவதும் சாலைகள் அமைத்தல், கல்விச் சாலைகளை நடத்துதல், கிணறுகள் வெட்டுதல் முதலிய காரியங்களைக் கவனிக்கின்றது.

இவ்வாறு ஜில்லாவின் ஆட்சி நடைபெறுகிறது. பத்திரப்பதிவு இலாகா, ஆப்காரி இலாகா, விவசாய இலாகா, கால்நடை இலாகா, சுகாதார இலாகா முதலிய வேறு பல இலாகாக்களும் உண்டு.

கேள்விகள்

1. உன்னுடைய ஜில்லா எது? ஜில்லா போர்டு சபையின் தலைவர் யார்?

2. ஜில்லாவின் முக்கிய அதிகாரி யார்?

3. ஜில்லாவிலுள்ள சில இலாகாக்களின் பெயர்களைக் கூறு.

4. உன் ஜில்லாவிலுள்ள அதிகாரியின் பெயர் என்ன?

5. நீ படிக்கும் பாடசாலைக்குக் கல்வி அதிகாரி எப்பொழுது வருவது வழக்கம்?

---

14. சென்னை மாகாணம்

பல ஜில்லாக்கள் அடங்கியது ஒரு மாகாணம். நாம் இருப்பது சென்னை மாகாணம். நமது மாகாணத்தின் தலைவர் கவர்னர். இப்பொழுது கவர்னராக இருப்பவர் சர். ஆர்தர் ஹோப் என்பவர். இவர் சென்னையில் வசிக்கிறார்.

சர். ஆர்தர் ஹோப்

இவர் இந்த மாகாணத்தின் தலைவராக இருந்துகொண்டு, மாகாண ஆட்சியை நடத்திவருகிறார். இவருக்கு ஆலோசனைகூற பல உத்தியோகஸ்தர் இருக்கிறார்கள். அவர்கள் மாகாண ஆட்சியில் ஒவ்வொரு இலாகாவின் நடைமுறைகளைக் கவனித்து ஆலோசனை கூறுகிறார்கள். இவர்களுக்கு 'அட்வைஸர்கள்' என்று பெயர்.

கல்வி இலாகா, நியாய இலாகா இவைகளுக்கு மாகாண அதிகாரிகள் தனித்தனியாக இருக்கிறார்கள். மாகாண அரசாங்கத்துக்கு உள்பட்ட விஷயங்களை அந்தந்த இலாகா கவனிக்கிறது. ஜில்லாச்

ஒரிஸ்ஸா
விசாகப் பட்டணம்
கீழ் கோதாவரி
ஹைதராபாத்
மேல கோதாவரி
குண்டூர்
கர்நூல்
பல்லாரி
கடப்பை
நெல்லூர்
அனந்தபுரம்
சித்தூர்
மைசூர்
சென்னை
செங்கல்பட்டு
வட ஆர்க்காடு
வங்காளக் குடாக்கடல்
சேலம்
தென் ஆர்க்காடு
கோயமுத்தூர்
தஞ்சாவூர்
மதுரை
இராமநாதபுரம்
திருநெல்வேலி
இலங்கை

சபைகள், ஜில்லாக்களின் ஆட்சி முதலியவற்றைக் கண்காணித்தும், ஜில்லாவுக்குள் உண்டாகும் சிக்கல்களை விசாரித்தும் வருவது மாகாண அரசாங்கமே.

நமது சென்னை மாகாணத்தில் 25 ஜில்லாக்கள் இருக்கின்றன. மாகாண ஆட்சியைப் பற்றி மேல் வகுப்பில் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்வோம்.

கேள்விகள்

1. நமது மாகாண கவர்னர் யார்?
2. அட்வைசர்களின் வேலை என்ன?
3. மாகாண அரசாங்கத்தின் பொதுவான வேலை என்ன?

---

15. சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம்

பள்ளிக்கூடங்களில் சில சிறுவர்கள் சிவப்புச் சிலுவைச் சின்னத்தைத் தங்களுடைய சட்டையின்மேல் அணிந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் எப்போதும் சுத்தமாக இருக்கிறார்கள்; அக்கம் பக்கம், வீடு, பாடசாலை ஆகியவற்றைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுகிறார்கள். அடிக்கடி கூடிப் பேசுகிறார்கள். அவர்கள் யார்?

அவர்கள்தான் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த சிறுவர்கள். அந்தச் சின்னம் சங்கத்தின்

அடையாளம். வெண்மையான வட்டச் சின்னத்தின் குறுக்கே சிவப்பு நிறச் சிலுவை எழுதப்பட்டிருக்



கிறது. வெண்மையான கொடியில் சிவப்புச்சிலுவை எழுதப்பட்டிருப்பது இந்தச் சங்கத்தின் கொடியாகும்.

1864-ஆம் வருஷத்தில் ஸ்விஸ் தேசத்தைச் சேர்ந்த ஹென்றி துனந்து என்பவர் இந்தச் சங்கத்தை ஏற் படுத்தினர். யுத்தத்தில் அடிப்பட்டுக் கிடப்பவர்களுக்கு உதவிபுரிய வேண்டு மென்று இது முதலில் ஆரம்பிக்கப் பட்டது. இப்போது இதன் நோக்கம் விரிவடைந்துள்ளது. முதலில் இதில் சேர்ந்தவர்கள் முதியவர்களேயாவர். ஆரம்பத்தில் சிறுவர்கள் இந்தச் சங் கத்தில் சேரவில்லை.

1914 ஆம் வருஷத்தில் நடந்த ஜெர்மன் யுத்தத் தில் சிறுவர் செஞ்சிலுவைக் சங்கம் ஆரம்பிக்கப் பட்டது. முதன் முதலாக கனடாவின் க்விபெக் நகரத்தில் செஞ்சிலுவைச் சிறுவர்கள் போர்வீரர் களுக்கு உடைகளையும், காயம் கட்டும் துணிகளையும் தயார் செய்து கொடுத்தார்கள். யுத்த முடிவில் கல்வி அதிகாரிகள் இந்தச் சங்கத்தைப் பாடசாலை மாணக்கர்களிடையே பரப்பினர்கள். இப்பொழுது சுமார் 10 கோடிச் சிறுவர்கள் இந்தச் சங்கத்தில் சேர்ந்திருக்கிரூர்கள். உலக முழுவதும் கிளைச்சங்கங் கள் ஏற்பட்டு நடைபெறுகின்றன. அயல்நாட்டுச்

சிறுவர்களுக்குக் கடிதப்போக்கு வரத்துக்கள் நடைபெறுகின்றது. இதனல் உலக நட்பு ஏற்படுகிறது.

1925 ஆம் ஆண்டில் சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டது. முதன் முதலாகப் பஞ்சாப் மாகாணத்தில் இதை ஆரம்பித்தார்கள். இன்று பல்லாயிரக்கணக்கான பாடசாலைகளில் இந்தியா முழுவதும் அநேக சங்கங்கள் இருக்கின்றன. இம்பொழுது நடந்து முடிந்த இரண்டாவது உலக யுத்த வீரர்களுக்கு வேண்டிய பல உதவிகளைச் சிறுவர் செஞ்சிலுவைச் சங்கத்தார் செய்து வந்தனர் என்று நாம் அடிக்கடி கேள்விப் பட்டோம் அல்லவா ?

இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் மூன்று. அவை **1. தன் சுக விருத்தி, 2. பிறருக்கு உதவி செய்தல், 3. உலகத்துடன் நட்புக் கொள்ளுதல்** என்பன.

தன் சுக விருத்தி :

1. சுகாதார விளையாட்டுக்களை விளையாடுவதும், சிறுவர்களை விளையாடச் செய்வதும்.

2. வீட்டுச் சுத்தம், தான் பழகும் இடம், போகும் இடம் இவற்றின் சுத்தம் ஆகியவற்றைக் கவனிப்பது.

3. சுகாதாரப் போட்டிக்களை நடத்துவதும், அதன் மூலம் சுகாதாரத்தைப் பரவச் செய்வதும்.

4. சுகாதார வாசகங்களையும், பாட்டுகளையும் தயார் செய்வது.

5. சேரிகள், சிறு கிராமங்கள் ஆகிய சுகா

தாரம் குறைந்துள்ள இடங்களுக்குப்போய் பிர சாரம் செய்வதும், நாடகங்கள் நடத்துவதும், பாட்டு களைப் பாடுவதும், அங்குள்ள சிறுவர்களுக்கு எண் ணெய், சோப்பு முதலியவைகளைக் கொடுப்பதும்.

6. பள்ளிக்கூடத்தில் ஆசிரியர், வைத்தியர் முதலியோர்களுக்கு உதவி புரிவது.

7. பள்ளிக்கூடத்தின் பொதுவான சுத்தத் தைக் கவனிப்பதும், வகுப்பு அறைகளை ஒழுங்காக வைத்துக் கொள்வதும் ஆகியவைகள் தன் சுகத்தின் மூலாதாரமான வசதிகளாகும்.

பிறருக்கு உதவி புரிதல் :

1. வீட்டில் நோயாளிகளைக் கவனித்தல், அவ ருக்கு வேண்டியவற்றைக் கொடுத்தல், சிறு குழந் தைகளைச் சுத்தமான வழியில் பழக்குதல், சமையல் அறையை அடிக்கடி கவனித்து அது சுத்தமாக இருக்கிறதா, பண்டங்கள் மூடிவைக்கப்பட்டிருக் கின்றனவா என்று பார்த்துக் கொள்ளுதல்.

2. நோயாளிகளுக்கு உதவி புரியத் தெரிந்து கொள்ளுதல். ஏழை மாணவர்களுக்குப் புத்தகம் வாங்கிக்கொடுத்தல். அவர்களுக்குச் சுத்தமாக இருக்கும்படி உதவி செய்தல், நோயால் வருந்தும் மாணக்கர்களுக்கு மருந்து வாங்கித் தருதல்.

3. வைத்தியசாலைகளுக்குப் போய் அங்குள்ள நோயாளிகளைச் சந்தோஷப்படுத்துதல், அவர்கள் எழுதும் கடிதங்களைத் தபால் பெட்டியில் போடுதல் போன்ற சிறு உதவிகளைச் செய்தல்.

4. பஞ்சம், வெள்ளம், நெருப்பு இவைகளால் கஷ்டப்படும் மக்களுக்கு வேண்டிய சிறு உதவிகள் புரிதல். சிலுவைச் சங்கத் தலைவர்களின் கட்டளைப் படி பல உதவிகளைச் செய்தல் ஆகிய இவை பிறருக்குச் செய்யும் உதவிகளாகும்.

உலக நட்பு :

உலகத்திலுள்ள மற்றச் செஞ்சிலுவை சங்கத்தாருடன் சிநேகம் கொள்ளுவது உலக நட்பை ஏற்படுத்தும். ஒரு தேசத்திலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தார் உலகிலுள்ள மற்ற செஞ்சிலுவைச் சங்கத்தாருடன் கடிதப்போக்கு வரத்துக்கள் செய்வது உண்டு. இதனல் அந்தந்தத் தேசத்தில் எவ்வாறு இந்தச் சங்கங்கள் நடைபெறுகின்றன என்று அறிந்து கொள்ளவும், ஒவ்வொரு நாட்டின் அதிசயங்களைக் கடிதங்களின் மூலமாக அறிந்து கொள்ளவும் முடியும். இவை உலக நட்புக்கு அவசியமானவை.

இந்தச் சங்கத்தின் சின்னம் ஒரு நாட்டையோ, ஒரு மதத்தையோ ஒரு கட்சியையோ சேர்ந்ததன்று. வெண்மையின்மேல் சிவப்புச்சிலுவை எழுதப் பெற்றுள்ள இந்த அடையாளம், அன்பையும் சேவையையும் காட்டுவதாகும். ஆகையினல்தான் உலக முழுதும் இந்தச் சங்கம் பரவ முடிகிறது. இந்தச் சங்கத்தை எப்படி அமைப்பது, எப்படி நடத்துவது என்பதைப்பற்றி ஐந்தாவது வகுப்பில் நீங்கள் விவரமாகத் தெரிந்து கொள்வீர்கள்.

கேள்விகள்

1. சிறுவர் செஞ்சிலுவைச் சங்கத்தை எப்பொழுது நம் நாட்டில் ஆரம்பித்தார்கள்?

2. இச் சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் எவை?

3. உன் பாடசாலையில் இருக்கும் செஞ்சிலுவைச் சிறுவர்கள் என்னென்ன செய்கிறார்கள்?

---

16. தபால் கடிதம்

ஓர் ஊரிலிருந்து வேறு ஊர்களுக்குச் செய்தி அனுப்பவேண்டும் என்றால் நாம் கடிதம் எழுதுகின்றோம். பழைய காலத்தில் குதிரையாட்கள் மூலமாகவும், பிரயாணிகள், வியாபாரிகள் மூலமாகவும், பறவைகளின் மூலமும் வேறு ஊர்களுக்குக் கடிதங்களை அனுப்பி வந்தார்கள். அந்தக் காலத்தில் கடிதப் போக்குவரத்து மிகக் கஷ்டமாக இருந்தது. இந்தக் காலத்தில் போக்குவரவு சாதனங்கள் அதிகப்பட்டிருப்பதால் தபால், தந்தி ஆகியவை மிகச் சிறிய கிராமத்துக்கும் சீக்கிரத்தில் போய்ச் சேருகின்றன.

நாம் சாதாரணமாகக் கார்டுதான் எழுதுகின்றோம். கார்டின் ஒரு பக்கம் சுத்தமாக இருக்கிறது. மறு பக்கத்தின் நடுவில் குறுக்கே ஒரு கோடு இருக்கிறது. கோட்டின் வலதுபுறத்தில் கார்டு யாருக்குச் சேர வேண்டுமோ அவருடைய பெயரை எழுதி விலாசம் எழுதவேண்டும். விலாசம் எழுதும் பக்கத்தின் தலைப்பில்தான் நமது சக்கரவர்த்தியின் படம்

இருக்கிறது. மற்ற இடத்தில் நாம் எழுதும் விஷயம் எல்லாவற்றையும் எழுதலாம்.

படத்தைப் பாருங்கள். ஒருவன் தான் எழுதிய கடிதத்தைத் தபால் பெட்டியில் போடுகிறான். இப்படியே பலர் போடுகிறார்கள். அப்படிச் சேர்ந்த கடிதங்களைத் தபால் சேவகன் எடுத்துக் கொண்டிருப்பதைப் பாருங்கள். அவன் கடிதங்களைத் தினந்தோறும் குறித்த நேரத்தில் வந்து எடுத்துக் கொண்டு போகின்றான். தபால் நிலையத்தில் கடிதங்களின்மேல் முத்திரையிடுகிறார்கள். அந்த முத்திரையில் தேதியும் ஊரின் பெயரும் இருக்கும். பிறகு அந்தக் கடிதங்களைக் கட்டாகக் கட்டி ரயிலுக்கு அனுப்பிவிடுவார்கள். நகரங்களில் அதிகமாகக் கடிதங்கள் சேரும். அப்படிப்பட்ட இடங்களில் கடிதங்கள் அடங்கிய பைகளைச் சிவப்பு நிறம் பூசப்பட்ட மோட்டார் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போவார்கள். ரயிலில் கட்டுகளை அவிழ்த்துத் தனித் தனியாக ஸ்டேஷன் வாரியாகப் பிரித்துக் கட்டுவார்கள். தபாலுக்காக ரயிலில் ஒரு தனிப்பெட்டி இருக்கிறது. அதில் பல சிறு அலமாரிகள் இருக்கின்றன. 4-ஆம் படத்தைப் பாருங்கள். பலர் அதில் வேலை செய்கின்றனர். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அந்தந்த ஸ்டேஷன் கட்டைக் கொடுத்துவிடுகிறார்கள். அந்தந்த ஊர்த் தபால் கட்டுகளை வாங்கிச் செல்ல ஒரு தபால்காரன் ரயிலடியில் காத்திருப்பான். அவன் அதை எடுத்துக்கொண்டுபோய், போஸ்ட் மாஸ்டரிடம் சேர்த்து விடுவான்.



தபால் பிரயாணம்

அவர் உத்திரவின் பேரில் சேவகர்கள் அதை அவிழ்த்து முத்திரை அடிப்பார்கள். அந்த முத்திரையில் அந்த ஊர்ப்பெயரும், அன்றைய தேதியும் இருக்கும். கடிதங்களைத் தெருவாரியாகவும், சிறுசிறு ஊர் வாரியாகவும் பிரித்து வைத்து, அந்தந்த இடத்துக்கு எடுத்துக்கொண்டுபோய் விலாசதாரரிடம் கொடுக்கவேண்டும். கடிதம் கொடுப்பதைப் படத்தில் பாருங்கள். இவ்விதமே ஒருவர் அனுப்பும் பணமும் குறிப்பிட்டவருக்குப் போய்ச் சேருகிறது. பணம் பெற்றுக் கொண்டதற்கு அடையாளமாகப் பணம் அனுப்பினவருக்கு ஒரு ரசீதும் வருகிறது.

வெளி நாடுகளுக்கும் கடிதங்கள் அனுப்பலாம். ஆகாய விமானங்களின் மூலமாகவும் கடிதங்களை அனுப்புகிறார்கள். வெளிநாட்டுத் தபால் கட்டணம் அதிகமாக இருக்கும். ஆகாயத் தபாலுக்குக் கட்டணம் மிகவும் அதிகம்.

தபாலினால் நமக்கு ஏற்படும் நன்மைகள் பல உண்டு. குறைந்த செலவில் வெகுதூரத்திலுள்ள சுற்றத்தாருக்கு விஷயத்தைத் தெரிவிக்கின்றோம்; நேரில் அறிவித்துப் பேசுவதுபோல கடிதம் எழுதிச் செய்திகளைத் தெரிந்துகொள்ளுகின்றோம்; சாமான்களையும் வெளி ஊர்களுக்கு அனுப்புகின்றோம். கடிதப் போக்குவரத்து இவ்வளவு வளர்ந்ததற்குக் காரணம், போக்குவரவு சாதனங்களேயாகும். அவைகளே ரயில், மோட்டார் முதலானவை.

கேள்விகள்

1. கடிதத்தின் மேலுள்ள முத்திரைகளிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ளலாம்?

2. வெளிநாட்டுக்குச் சீக்கிரம் போய்ச் சேரவேண்டிய கடிதத்தை எப்படி அனுப்புவாய்?

3. ஒரு கார்டில் உன் விலாசத்தை எவ்வாறு எழுதுவாய்?

---

17. புகை வண்டிப் பிரயாணம்

இதோ பாருங்கள்! ஒரு புகை வண்டி நிலையம் (Railway Station) இருக்கிறது. பிரயாணிகள் தம்தம் மூட்டை முடிச்சுகளோடு வண்டியில் ஏறுகிறார்கள். அதிகச் சாமான்களைக் கொண்டுபோக வேண்டுமானால் தனியாக வேறு கட்டணம் செலுத்த வேண்டும்.

நமது தேசத்தில் 1850-ல் தான் முதன்முதலாக இருப்புப்பாதை போடப்பட்டது. அப்பொழுது சுமார் 20 மைல் தூரந்தான் புகைவண்டி ஓடிற்று. 1857-ல் ரயில்வே கம்பெனி ஏற்பட்டது. அன்று முதல் இன்று வரையில் போக்கு வரவு சௌகரியங்கள் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்து வருகின்றன.

புகை வண்டிகள் இரவும் பகலும் ஓடுகின்றன. புகை வண்டியில் பிரயாணம் செய்வதால் செலவு குறைகிறது; சீக்கிரமாகவும் போய்ச் சேரலாம். தூரப் பிரயாணத்துக்குப் புகை வண்டிதான்



ரயில்வே ஸ்டேஷன்

ஏற்றது. வண்டியில் ஏறுவதற்கு முன்பே ஒவ்வொரு பிரயாணியும் தான் போகும் இடத்திற்குரிய கட்டணத்தைச் செலுத்தி 'டிக்கெட்' வாங்கிவிடவேண்டும். டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வது தவறு; அப்படிச் செய்தால், இரண்டு மடங்கு பிரயாணக் கட்டணம் கொடுக்க வேண்டி வரும்.

ரயிலடிக்கு வந்ததும், டிக்கெட்வாங்கிக்கொண்டு உள்ளேயிருக்கும் ரயிலடி மேடைக்குப் போக வேண்டும். அந்த மேடைக்குப் போகும்போதே வழியில் ஒரு டிக்கெட் பரிசோதகர் நின்றுகொண்டு டிக்கெட்டுகளைப் பார்த்துக் கத்தரித்துப் பிரயாணிகளை உள்ளே விடுகிறார். மேடையின் ஓரத்தில்-தான் புகைவண்டி வந்து நிற்கும். வண்டி வந்ததும், வண்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொள்ளவேண்டும். அனைவரும் ஏறின பிறகு புகை வண்டியின் கார்டு பச்சைக் கொடியைக் காட்டுகின்றார். அதைக் கவனித்து வண்டியோட்டியும் வண்டியை ஓட்டுகிறார். கார்டு சிவப்புக் கொடியைக் காட்டினால் எஞ்சினில் உள்ள டிரைவர் வண்டியை நிறுத்தி விடுவார். இரவில் பச்சை, சிவப்பு விளக்குகளை உபயோகிக்கிறார்கள் கார்டு வண்டியின் கடைசிப் பெட்டியில் இருப்பது வழக்கம். அவர்தான் ஒரு ரயில் வண்டிக்கு அதிகாரி.

ஒவ்வொரு புகைவண்டி நிலையத்திலும் ஓர் அதிகாரியுண்டு. அவர்தான் 'ஸ்டேஷன்மாஸ்டர். அவரிடமும் பச்சை, சிவப்புக் கொடிகளும் விளக்குகளும் உண்டு. அவருக்குத்தான் வண்டியை நிலை

யத்தினுள்ளே அனுமதிக்கவும், வெளியே அனுப்பவும் அதிகாரம் உண்டு. வண்டி உள்ளே வரலாம் என்பதற்கு அடையாளமாக கைகாட்டி மரம் சாய்கிறது. இவ்வாறு வண்டித் தொடர் வழியிலுள்ள நிலையங்களிலெல்லாம் நின்றுநின்று போகின்றது. அங்கங்கே இறங்க வேண்டியவர்கள் இறங்குவார்கள்; ஏறவேண்டியவர்கள் ஏறுவார்கள்.

புகை வண்டி கண்டவிடத்திலெல்லாம் ஓடாது. தண்டவாளத்தின் மேல்தான் ஓடும். அதனால்தான் ஒவ்வொரு ஊருக்கும் ரயில் வசதி ஏற்படுத்த முடியவில்லை. நமது மாகாணத்தில் அநேக ஊர்களுக்குப் பஸ்கள் செல்லுகின்றன. அவற்றாலும் போக்குவரவு வசதி ஏற்பட்டிருக்கிறது.

நமது மாகாணத்தில் இரண்டு ரயில்வே கம்பெனிகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்று தென்னிந்திய இருப்புப்பாதை (S. I. Ry.); மற்றொன்று தென் மகாராஷ்டிர இருப்புப்பாதை (M.&S.M. Ry.). இந்த இரண்டு இருப்புப் பாதைகளின் தலைமைக் காரியாலயங்கள் முறையே திருச்சிராப்பள்ளியிலும், சென்னையிலும் இருக்கின்றன.

கேள்விகள்

1. உனது சொந்த ஊர் எந்த ரயிலடிக்கு அருகே இருக்கிறது?

2. உங்கள் ஜில்லாவில் எந்த இருப்புப்பாதை ஓடுகிறது?

3. நீ செய்த ஒரு ரயில் பிரயாணத்தைப் பற்றிச் எழுது.

18. பாடசாலைத் தோட்டம்

பயிர்த்தொழில் செய்கிறவர்கள் நம் தேசத்தின் அதிகம் என்று முன் பாடத்தில் படித்திருக்கின்றோம். நாம் படிக்கும் பள்ளிக்கூடத்தில் தோட்டம் ஒன்று அமைத்துக் காய்கறி வகைகளைப் பயிர் செய்தால் நமக்குச் சந்தோஷமாக இருக்குமல்லவா? அதோடு பயிர்த்தொழிலும் நமக்குத்தெரியும். இந்தக் காலத்தில் சிறு இட த்தையும் வீணுக்காமல் பயிர்செய்கிறார்கள். அப்படியிருந்தும் காய்கறிகளின் விலை அதிகமாகத்தான் இருக்கிறது. அதனால் பள்ளிக்கூடத் தோட்டத்திலும் காய்கறி வகைகளை உண்டாக்குவது இலாபமல்லவா?

பாடசாலைகளில் தோட்டங்கள் இருக்கவேண்டுமென்று கல்வி அதிகாரிகளும் கட்டாயப்படுத்துகிறார்கள். அந்தத் தோட்டத்தில் நமக்குத் தேவையான காய், கீரை வகைகளை உண்டாக்க வேண்டும். அதோடு பாடசாலைக்கு அழகு தரும்படி பூஞ்செடிகளையும், குரோடன்ஸ்களையும், ஓரங்களில் மரங்களையும் வைக்கலாம். தோட்ட வேலை செய்யும்போது சிறுவர்களின் உடலுக்கு நல்ல பயிற்சியும் உண்டாகிறது. தோட்டவேலையால் உடலுக்கு நன்மையையும், காய் கறியையும் பெறுகின்றோம். இதனால் இரண்டு வித இலாபம் உண்டாகின்றதல்லவா?

செடி, கொடிகள் வளர வேண்டுமானால் சூரிய உஷ்ணம், தண்ணீர் ஆகிய இரண்டும் மிக முக்கியமானவை. சூரிய உஷ்ணம் படக்கூடிய பாகத்தில்

தோட்டத்தை அமைக்க வேண்டும். பாடசாலைக் கட்டிடத்தின் வட பாகத்தில் அல்லது தென்பாகத்தில் தோட்டம் இருந்தால், சூரிய வெளிச்சம் தடைபடாது. கிணறும் அருகே இருக்கவேண்டும். தோட்டத்தின் தரையை நன்ருய்க் கொத்தி மேல்மண் கீழாகவும், கீழ்மண் மேலாகவும் புரளும்படி மாற்ற வேண்டும். எத்தனை பாத்திகள் வேண்டுமோ அத்தனை பாத்திகளை அமைக்கவேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் சில மாணவர்களைப் பிரித்துவிட வேண்டும். அவர்கள் அந்தந்தப் பாத்தியில் குறிப்பிட்டதைப் பயிரிட்டு வளர்த்துக் காத்து வருவார்கள்.



பாடசாலைத் தோட்டம்

மண்ணைப் பண்படுத்துவது, அதற்குத் தகுந்த எருவை இடுவது ஆகிய காரியங்களை ஆசிரியர்களைக்

கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். பாடசாலையைச் சுற்றிச் சுவர் இருந்தால் தோட்டத்துக்கு வேலி போட வேண்டிய அவசியமிராது. இல்லாவிட்டால் கட்டாயம் வேலி போடவேண்டும். தோட்டத்துக்குள் நடப்பதற்குச் சிறு பாதையும் அமைக்க வேண்டும். கத்தரி, வெண்டை முதலியவைகளைப் பயிரிடலாம். தக்காளி நடுவது மிகவும் நல்லது. ஒவ்வொரு மாணாக்கனும் ஒரு சிறு நோட்டில் தான் தோட்டத்தில் செய்யும் வேலைகளை அவ்வப்பொழுது குறித்துவர வேண்டும்.

பாடசாலையின் கட்டிடத்தைச் சுற்றி ஓரமாகப் பூஞ்செடிகளை நடலாம். 'காம்பவுன்ட்' சுவரின் ஓரமாகச் சில மரங்களை வைக்கலாம்.

விளையாடும் இடத்தைச் சுற்றி வேப்பமரம், பூவரசுமரம் ஆகியவற்றை வளர்க்கலாம். தோட்டங்களின் ஓரங்களில் கொடி வகைகளை வளர்க்கலாம். அவரை, புடல், பாவல் முதலியவை மிகவும் நல்ல கறிகாய்களாகும்.

பயிரிட்ட காய்கறிகளை மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கிட்டு எடுத்துக்கொள்ளலாம். எடுத்துக் கொள்ளும் காய்கறிகளுக்குச் சிறிது பணமும் கொடுக்கலாம். வெளியில் வாங்கும் விலைக்குக் குறைவாகவே கொடுக்கலாம். மறுபடியும் தோட்டச் செலவுக்குப் பணம் வேண்டுமல்லவா? விற்றுவந்த பணத்தை அதற்குப் பயன் படுத்தலாம். தானே பயிரிட்டதைத் தன் வீட்டில் சமைத்துச் சாப்பிட்டால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்? தோட்ட

வேலைகளைப்பற்றி இயற்கைப் பாடத்தில் அதிக மாகப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

கேள்விகள்

1. தோட்டத்தில் காய்த்த காய்கறிகளை என்ன செய் வீர்கள்?

2. உங்கள் பாடசாலையின் தோட்டத்தில் என் னென்ன காய்கள் பயிராகின்றன?

3. உனது வீட்டுத் தோட்டத்தில் என்ன பயிரா கிறது?

---

19. சாலை விதிகளும் தற்காப்பு முறையும்

பெரிய நகரங்களில் கூட்டம் அதிகம். சாலைகளில் கணக்கற்ற வண்டிகள் ஓடுகின்றன. மோட்டார் சப்தம், சைக்கிள் ஓசை, ஜட்காகாரன் கூவல் ஆகிய எல்லாம் காதை அடைக்கின்றன. படத் தைப் பாருங்கள்! நான்கு தெருக்கள் கூடும் இடத்தில் ஒரு வட்டமான மேடையின்மீது ஒரு போலீஸ்காரன் நிற்கிறான். அவன் வண்டிகளை ஒழுங்காகப் போகச் செய்கின்றான்; கைகளைக் காட்டி வண்டிகளை நிறுத்துகின்றான்; ஒரு பக்கத்தி லிருக்கும் வண்டிகளைப் போகச்செய்கின்றான்; இவ் விதமான கட்டுப்பாடு இல்லாவிட்டால் தினம் அநேக விபத்துக்கள் நேரிடும். பலர் இறந்து விடுவார்கள்.

பாதையில் நடப்பதற்கான விதிகளையும், வண்டிகளில் போகும்போது தெரிந்துகொள்ள வேண்டிய குறிகளையும் ஒவ்வொருவரும் அறிந்து நடக்க வேண்டும்.

'இடது பக்கம் நட' என்பது பொதுவான முக்கிய விதி. இந்த விதியைக் கடைப்பிடித்தால் நமக்கு விபத்துக்கள் நேரிடா. மாணவர்களே! நீங்கள் படித்தவர்கள் அல்லவா? உங்களுக்குத் தெரிந்த சாலை விதிகளைத் தெரியாத பாமர மக்களுக்கு எடுத்துச் சொல்லி உதவி செய்யுங்கள்.

படத்தைக் கவனியுங்கள். வண்டிகள் ஒழுங்



படம்

காக ஒரே பக்கத்தில் போய்க் கொண்டிருக்கின்றன. பாதையின் குறுக்கே போக வேண்டுமானால்

முதல்பாதி தூரம் நமது வலது கைப் பக்கமாகவும், அடுத்தபாதி தூரம் நமது இடது கைப் பக்கமாகவும் திரும்பிப் பார்த்துக்கொண்டு போக வேண்டும். மற்ற நேரங்களில் பாதையின் ஓரமாகவோ, அல்லது மேடைகள் இருந்தால் அவற்றின் மேலோ நடந்து போக வேண்டும். ஒரு வண்டி நமது பார்வையை மறைத்துக் கொண்டிருந்தால் அப்போது குறுக்கே போகக்கூடாது. ஏனென்றால், அதன் பக்கத்தில் எதிராக வரும் வண்டியை நாம் பார்க்க முடியாமல் விபத்துக்கு உள்ளாக நேரும். தெருக்களில் விளையாடுவதும் கூடாது. விளையாடுவதற்காகத் தனி இடம் ஏற்பட்டிருக்கிறது. சில சிறுவர்கள் தெருக்களில் காற்றாடி (பட்டம்) விடுகிறார்கள். சிலர் அறுந்த காற்றாடியைத் தேடிக்கொண்டு கண்மூடித்தனமாக ஓடுகிறார்கள். இதனால் எத்தனையோ சிறுவர்கள் விழுந்து வண்டிகளில் மோதிக்கொண்டு காயப்படுகிறார்கள்.

சிலர் தெருவில் நின்றுகொண்டு வம்பு பேசிக் கொண்டிருப்பார்கள். வண்டிகள் வேகமாக வரும் போது அவர்கள் சரியாக ஒதுங்க முடியாமல் தவறி வண்டிகளில் மோதிக் கொள்வார்கள். வண்டிகளில் ஏறி, இறங்கும்போதும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நடக்கும்போது இரண்டு பக்கமும் கவனித்து நடக்கவேண்டும். வண்டிகள் நின்ற பிறகு இறங்க வேண்டும்.

மழை பெய்யும்போதும், பெய்த பிறகும் கால் விரல்களைத் தரையில் ஊன்றி நடக்க வேண்டும்.

தெருக்களிலுள்ள சாக்கடைக் கண்களைக் கவனித்து நடக்கவேண்டும். மழையில் அந்தக்கண்கள் சரியாகத் தெரியா. அவற்றில் கால் வைத்துவிட்டால் ஆபத்து நேரும். பாதைகளில் வாழைப்பழத்தோல் இருந்தால், எடுத்து அப்புறப்படுத்தவேண்டும். பலர் நடக்கும் பாதையை நாம் அசுத்தம் செய்யக்கூடாது. இவைகளை எல்லாம் நாம் கவனித்துப் பாதைகளில் நடக்க வேண்டும்.

சாலை விதிகளைப்பற்றி ஐந்தாம் வகுப்பில் இன்னும் விவரமாகப் படிபோம்.

கேள்விகள்

1. பாதையின் குறுக்கே போகும்போது அனுசரிக்க வேண்டிய விதி என்ன ?

2. வண்டிகள் இடதுபக்கம் போவதனல் ஏற்படும் நன்மை என்ன ?

3. பாதைகள் கூடும் இடத்தில் நிற்கும் போலீஸ் காரன் என்ன செய்கின்ருன் ?